Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 151 குரோதி வருடம், தை மாதம் 07 ஆம் திகதி திங்கட்கிழமை
(20.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 19, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12



## உஷ்



முன்னாள் ஜனாதிபதி ரணில் தனது சுயசரிதையை ஆங்கிலத்தில் எழுத ஆரம்பித்துள்ளார்.

அதன் ஆங்கிலப் பதிப்பு இங்கிலாந்திலுள்ள ஒரு நிறுவனத்திடமும் தமிழ்ப் பதிப்பு இந்தியாவிலுள்ள ஒரு நிறுவனத்திடமும் கையளிக்கப்படவுள்ளது.

இதற்கான பேச்சுகளை நடத்த பெப்ரவரி முதல் வாரத்தில் லண்டன் செல்லும் ரணில், அதன் பின்னர் அங்கிருந்து இந்தியா செல்லவுள்ளார்.

## கமெண்ட் கந்தர்...



அப்படியே மாற்று எதிர்க்கட்சி ஒன்றையும் உருவாக்க ஏலாதாமோ?

# ரணில் தலைமையில் 'நிழல்' பாராளுமன்றம்!

## அரசைக் கட்டுப்படுத்த அதிரடி நடவடிக்கை

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நிழல் (மாற்று) பாராளுமன்றத்தை நிறுவுவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்காணித்து அதற்கேற்ப மாற்று நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் இந்த நிழல் பாராளுமன்றம் முன்னாள் ஜனாதிபதி ரணிலின் ஆலோசனையின் பேரில் அமையவுள்ளது. இதற்கான கட்டிடம் மற்றும் நிதி வசதிகளை வழங்க சில தனவந்தர்கள் முன்வந்திருப்பதாக அறியமுடிகின்றது.

ஏற்கனவே பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தற்போது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் இந்த மாற்று பாராளுமன்றத்தில்.... » 02 பக்கம்

## முன்னாள் அமைச்சர் விஜயமுனி கைது



முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, பாணந்துறை வலான மோசடித் தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில்... » 02 பக்கம்



## வரலாறை தகர்த்தெறிந்த அநுர ஆட்சி: ஒரே சீனக்கொள்கைக்கு பச்சைக் கொடி

ஜிசாங் என்ற திபெத் மற்றும் ஜின்ஜியாங் என்ற உய்குர் தொடர்பான பிரச்சினைகளில் சீனாவை ஆதரிக்கவும் இந்த இரண்டு பிரச்சினைகளையும் ஒரே சீனக்கொள்கையுடன் இணைக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

15 வயதில் இருந்தே அரச தலைவராக இருந்த பௌத்த மத ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவின் தாயகமான ஜிசாங் அல்லது திபெத், 1951ஆம் ஆண்டு சீனாவால்... » 02 பக்கம்

## போதகர் ஜெரோமுக்கு எதிராக முறைப்பாடுகள்

### உயர்நீதிமன்றம் அனுமதி



போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக முறைப்பாடுகள் இருக்குமானால், அவற்றை மனுதாரர்கள் சட்ட மா அதிபருக்கு அனுப்பலாம் என்று உயர்நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும்... » 02 பக்கம்

## கனமழையால் பெரும் பாதிப்பு

### பல இடங்களில் மண்சரிவு எச்சரிக்கை

### கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு பூட்டு



நாட்டின் பல இடங்களில் தொடர்ச்சியாக மழை பெய்வதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பலத்த மழையுடனான வானிலை காரணமாக... » 02 பக்கம்

## - மன்னார் துப்பாக்கிச்சூடு -

## இராணுவ சிப்பாய் உள்ளிட்ட மூவர் கைது

மன்னார் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இராணுவத்தில் பணியாற்றும் சிப்பாய் ஒருவர் உள்ளடங்களாக மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

» 02 பக்கம்

## - யாழ். நகைக்கடைக் கொள்ளை -

## இராணுவப் புலனாய்வு பிரிவின் இருவர் கைது

யாழில் உள்ள நகைக் கடைக்குச் சென்று நூதனமான முறையில் பணத்தை அபகரித்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகள் உள்ளிட்ட அனைத்து... » 02 பக்கம்



## நீதித்துறையில் இருந்து ஓய்வுபெற்றார் நீதிபதி இளஞ்செழியன்

அரசியல் தலையீடுகளுக்கு அடிபணியாதவரும் நீதியை சரியாக நிலைநாட்டும் நீதிவான் என போற்றுதற்குரிய நீதிபதியாகவும் இலங்கை நீதிபதிகளில் வெள்ளி விழாவைப் பூர்த்தி செய்த முதல் தமிழ் நீதிபதியாகவும் 27 ஆண்டுகள் பூர்த்தி செய்த பெருமைக்குரியவராகவும் திகழ்ந்த மதிப்புக்குரிய நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்... » 02 பக்கம்

## விக்டர் ஐவன் காலமானார்



» 02பக்கம்




» 03பக்கம்



# ஊடகவியலாளர்களின் அறிவை மேம்படுத்த ஊடக நிறுவனமொன்றை ஸ்தாபிக்க ஆலோசனை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



ஊடகவியலாளர்களின் ஊடக அறிவை மேம்படுத்தி அவர்களின் தொழிலை மேலும் விரிவுபடுத்தும் வகையில் அவர்களுக்கான ஊடக நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கு தேவையான திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள ஊடக அமைச்சில் இலங்கை ஊடகவியலாளர் சபை உறுப்பினர்களுடன் அண்மையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நிறுவனத்தை நிறுவுவதற்கு முன்னைய அரசாங்கங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் அது இதுவரை சாத்தியமடையவில்லை என்பது இந்த கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் இந்த நிறுவனத்தை ஸ்தாபிப்பதே தமது நோக்கம் எனவும் இலங்கையில் ஊடகத் தொழிலில் ஈடுபடுபவர்களை சிறந்த ஒரு ஊடகவியலாளர்களாக இந்த தேசத்துக்கு அறிமுகப்படுத்துவதே எமது நோக்கம் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்களின் சுதந்திரம் அத்துடன் கௌரவம் மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் 50 வருடங்கள் பழமையான 1973ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பத்திரிகைச் சபைச் சட்டத்தை புதிய தகவல் தொடர்பு போக்குகளுக்கு ஏற்றவாறு புதுப்பிப்பது குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்க நெறிமுறைகள் நடைமுறையில் இருந்தாலும் அதில் தற்போது சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இலங்கை ஊடகவியலாளர் சபையின் முயற்சியின் கீழ் ஊடகவியலாளர்களின் கல்வித் தரம் நலன் மற்றும் தொழில்சார் திறன்களை மேம்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை எவ்வாறு ஒழுங்கமைக்க வேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக, ஊடகவியலாளர்களுக்கான விரிவான கற்கை நெறியை ஆரம்பிக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

பள்ளிக் குழந்தைகள் மற்றும் தொடர்பாடல் பாடத்தில் ஆர்வமுள்ளவர்களை இலக்காகக் கொண்டு நடத்தும் தொடர் சிறப்புப் பட்டறைகளை நல்ல நிறுவனக் கட்டமைப்பின் கீழ் தொடரவும் முடிவு செய்யப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஊடகத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் என்.ஏ.கே.எல்.விஜேநாயக்க, இலங்கை பத்திரிகை ஆணையாளர் நிரோஷன தம்பவிட்ட, தற்போதைய தலைவர் பேராசிரியர் டியூடர் வீரசிங்க, சிரேஷ்ட ஊடகவியலாளர் அரியநந்த தொம்பகஹவத்த, சட்டத்தரணி மஹிஷா முதுகமுவ லெஸ்லி தேவேந்திரதா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சூதாட்ட நிலையங்களால் இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தப்படவேண்டிய ரூ.262 மில்லியன் வரி நிலுவை

நேரடி ஒளிபரப்பு வசதிகளைக் கொண்ட சூதாட்ட நிலையங்களிலிருந்து செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் அபராதத் தொகையான ரூ.262 கோடியே 11 இலட்சத்து 8ஆயிரத்து 150 இன்னும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தப்படவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலக அறிக்கையில் தெரியவந்துள்ளது.

இந்த சூதாட்ட நிலையங்களிலிருந்து மாதாந்த மொத்த வசூலில் செலுத்த வேண்டிய வரிகளும் தாமதமாக வரி செலுத்துதல் தொடர்பான அபராதங்களும் 2014 முதல் நிலுவையில் உள்ளதாக கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டுகிறது.

இந்த நிலுவைத் தொகைகளை வசூலிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு கணக்காய்வு அலுவலகம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு பரிந்துரைத்துள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

### நீதித்துறையில்...

நீதித்துறை சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

05.02.1997 நீதிபதியாக நியமனம் பெற்று வவுனியாவில் தனது முதல் நியமனத்தை நீதவானாக ஆரம்பித்து 05.02.2024 வரையான 27 ஆண்டுகளை பூர்த்தி செய்த முதல் தமிழ் நீதிபதி என்ற சிறப்புக்குரியவராக அவர் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய வடக்கு – கிழக்கு மாகாண அனைத்து நீதிபதிகளிலும் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்த முதல் பெருமைக்குரிய தமிழ் நீதிபதியாக இவர் திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கதோர் அம்சம்.

1999இல் யாழ். செம்மணி புதைகுழி வழக்கு, 1999இல் மன்னாரில் காமாலிக்கா கொலை வழக்கு, மடு தேவாலய குண்டு வெடிப்பு வழக்கு மற்றும் லயன் எயார் குண்டு வெடிப்பு வழக்கு. 2000 – 2008 ஒன்பது ஆண்டுகள் கடுமையான யுத்தம் நிலவிய காலப்பகுதியில் வவுனியாவில் நீதிபதியாக கடமையாற்றியமை, ஜெயசிக்குறு தாக்குதல் காலம், யுத்த நிறுத்த காலம், மீண்டும் இறுதி யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட யுத்த காலத்தில் வவுனியா நீதிபதியாக கடமையாற்றியமை, 2006இல் வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் கொலை வழக்கு, 2008இல் மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டமை, 2009இல் திருகோணமலை கோயில் குருக்கள் மனைவி கொலை வழக்கில் மரண தண்டனை வழங்கியமை, அந்த கொலை வழக்கு தீர்ப்பு உயர்நீதிமன்றம் வரை சென்று தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டமை, 2014இல் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்றமை, 2015இல் கணவர் கொலை வழக்கில் இஸ்லாமிய பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமை, தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டமை, 2015இல் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்று மூவர் அடங்கிய தீர்ப்பாயத்தில் -1 நீதிபதியாக வித்தியா கொலை வழக்கில் தனித் தீர்ப்பு எழுதி மரண தண்டனை விதித்தமை, 2018இல் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்று யாழ். இளைஞன் கொலை வழக்கில் இரு இராணுவ அதிகாரிகளுக்கு மரண தண்டனை விதித்தமை, 2022இல் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டு, தயா மாஸ்டர் வழக்கில் இரு வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கி விடுதலை செய்தமை உள்ளிட்ட பல வழக்குகளை 27 வருட காலப் பகுதியில் நியாயமான முறையில் நீதி தவறாமல் தீர்ப்பு வழங்கிய நீதவானாக இவர் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### விக்டர் ஐவன்...

சிரேஷ்ட ஊடகரும் ராவய பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியருமான விக்டர் ஐவன் (75 வயது) நேற்று காலமானார்.

விக்டர் ஐவன் தனது இளமை பருவத்தில் மார்க்சிஸ்ட் கிளர்ச்சியாளராக இருந்தார்.

பின்னர் சிங்கள பத்திரிகையான ராவயவின் ஆசிரியரானார். ராவய பத்திரிகையின் தொடக்கத்திலிருந்து தொடர்ந்து 25 வருடங்கள் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். விக்டர் ஒரு புலனாய்வு பத்திரிகையாளர், அரசியல் விமர்சகர், ஒரு கோட்பாட்டாளர், சமூக ஆர்வலர் மற்றும் பல புத்தகங்களை எழுதியவர்.

### யாழ். நகைக்கடை...

குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

06 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளையடிக்கப்பட்ட பணமும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜெயசிங்கவின் வழிகாட்டலுக்கமைய யாழ்ப்பாண குற்றவிசாரணை பொலிஸ் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையிலான குழுவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து குறித்த செயலுக்கு உடந்தையாக இருந்த வேன் சாரதி உள்ளிட்ட மூவர் கண்டியில் கைது செய்யப்பட்டனர்.

மேலும் இரண்டு சந்தேக நபர்கள் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடையொன்றுக்குச் சென்ற குழுவொன்று வருமான வரித்துறை என தெரிவித்து 30 இலட்சம் ரூபா பணத்தை பறித்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து கண்காணிப்பு கெமராக்களின் உதவியுடன் குற்றவாளிகளை கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் கைதான பிரதான சந்தேக நபரை நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை கண்டியில் நேற்று கைதான மூவரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தனர். அவர்களை தொடர்ந்து, மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களாவர்.

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிதி நிறுவனமொன்றின் நுவரெலியா கிளையொன்றின் முகாமையாளர், உதவி முகாமையாளர் ஆகியோரும் இந்த கொள்ளையுடன் சம்பந்தப்பட்டுள்ளதால், அவர்களும் கைது செய்யப்பட்டனர். நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்தியே கொள்ளையில் ஈடுபட்டனர். வாகனமும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளது.

### கனமழையால்...

நாட்டின் 05 மாவட்டங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி, நுவரெலியா, காலி, அநுராதபுரம் மற்றும் குருணாகல் ஆகிய 05 மாவட்டங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த மாவட்டங்களில் 325 குடும்பங்களைச் சேர்ந்த 910 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தங்களால் 09 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, பலத்த மழையுடனான வானிலையால் முந்தெனி ஆறு, மல்வத்து ஓயா மற்றும் மகாவலி கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

முந்தெனி ஆற்றின் நீரேந்துப் பகுதிகளான அம்பாறை மாவட்டத்தின் மஹாஓயா மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று மற்றும் கோரளைப்பற்று பிரதேச செயலக பிரிவுகளுக்கு சிறியளவிலான வெள்ள அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மல்வத்து ஓயாவின் தாழ்நிலப் பகுதிகளான வெங்கலச்செட்டிக்குளம், மடு, முசலி, நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகாவலி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையால் திம்புலாகல, ஈச்சிலம்பற்று, கிண்ணியா, கந்தளாய், கோறளைப்பற்று வடக்கு, மூதூர், சேருவில, ஹிங்குராங்கொடை, லங்காபுர, மெதிரிகிரிய, தமன்கடுவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இருநாட்களாக பெய்து வரும் மழை காரணமாக சேனாநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் 106 அடியாக உயர்ந்துள்ளது.

இதனையடுத்து நேற்றுக் காலை 08 மணிக்கு 05 வான்கதவுகள் அரை அடிக்கு திறந்துவிடப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.எம்.ரியாஸ் தெரிவித்தார்.

இதனிடையே, பலத்த மழை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மன்னார், வவுனியா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் பல பகுதிகளிலும் 150 மில்லிமீற்றருக்கும் கூடிய பலத்த மழைவீழ்ச்சி பதிவாகுமென திணைக்களம் அறிவித்துள்ளது.

வட மாகாணத்திலும் மாத்தளை, நுவரெலியா, பொலனறுவை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனைய இடங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும் எதிர்வுகூரப்பட்டுள்ளது.

இடி, மின்னல் தாக்கங்களின் போது ஏற்படும் அனர்த்தங்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதனிடையே நேற்றுக் காலையுடன் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் அதிகளவிலான மழைவீழ்ச்சி திருகோணமலையில் பதிவாகியுள்ளது.

திருகோணமலையில் 178 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பலத்த மழையுடன் கூடிய வானிலை காரணமாக 04 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கண்டி, குருணாகல், மாத்தளை மாவட்டங்களின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் உடுதும்பர பிரதேச செயலகப் பிரிவு, மாத்தளை மாவட்டத்தின் யட்டவத்த, உக்குவெல, இரத்தோட்டை, வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 8.00 மணிக்கு வந்துள்ள இந்த அபாய எச்சரிக்கை இன்று காலை 08 மணி வரைக்கும் அமுலில் இருக்கும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் கண்டி மாவட்ட பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை மூடப்படுமென கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இன்று பாடசாலைகளில் நடைபெறவிருந்த பரீட்சைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி இடம்பெறுமென மாகாண ஆளுநர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

### மன்னார்...

இராணுவ சிப்பாய் தலை மன்னார் பிரதான வீதி நடுக்குடா கடற்கரைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த 16ஆம் திகதி மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக நடந்த துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டிருந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

கடந்த சில வருடங்களின் முன்னர், மன்னார், உயிலங்குளத்தில் நடந்த இரட்டைக் கொலை சம்பவத்தின் தொடர்ச்சியாக நடந்து வரும் கொலைகளின் வரிசையில் இந்த சம்பவமும் நடந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

இரட்டைக்கொலை வழக்கு விசாரணைக்காக வந்தவர்களே துப்பாக்கிதாரிகளால் சுடப்பட்டனர்.

வெளிநாட்டில் உள்ள ஒருவரே கூலிப்படையினர் மூலம் இந்த துப்பாக்கிச்சூட்டை நடத்தியதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அந்த நபரை சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையில், கூலிப்படையாக செயற்பட்டு துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகத்தில் இருவரை நேற்று முன்தினமே பொலிஸார் கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மன்னார், நடுக்குடாவில் வைத்து ஒருவரும் கொழும்பில் வைத்து ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை நேற்றும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




### போதகர்...

வகையில் வெறுப்புப் பேச்சு பேசுவது தொடர்பாக போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக இறுதி முடிவை எடுக்கும்போது, இந்த முறைப்பாடுகளும் மதிப்பாய்வு செய்யப்படும் என்று சட்ட மா அதிபர் கடந்த வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றில் உறுதியளித்துள்ளார்.

சட்ட மா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்திய மூத்த துணை மன்றாடியார் நாயகம், சுதர்சன டி சில்வா சட்ட மா அதிபரின் சார்பில் இந்த உறுதிமொழியை மன்றில் வழங்கினார். மதத் தலைவர்கள் குழு ஒன்று, போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவின் விசாரணையின்போது இந்த விடயத்தை சுதர்சன டி சில்வா மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து மனுதாரர்கள் சார்பாக கூடுதல் முறைப்பாடுகளை சட்ட மா அதிபருக்கு அனுப்ப, மனுதாரர்களின் சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தனவுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்தது.

இதேவேளை போதகர் ஜெரோமின் பணமோசடி நடவடிக்கைகள் குறித்து குற்றவியல் புலனாய்வுத் துறையின் விசாரணையில் மனுதாரர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக, சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

தண்டனைச் சட்டம் மற்றும் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டத்தின் கீழ் மீறல்களுக்காக போதகர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாக்கப்பட்டபோதும், அவருக்கு எதிரான விசாரணைகள் போதுமானதாக இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எல்லே குணவன்ச தேரர், பெங்கமுவே நலக தேரர், அங்குலுகல்லே ஸ்ரீ ஜினானந்த தேரர், அருட்தந்தை நிசான் கூரே, சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் ஹசன் மௌலானா ஆகியோர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ரணில்...

சேர்க்கப்படவுள்ளனர். அண்ணளவாக 450 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் இதற்காக தகுதிபெற்றுள்ளனர். ஆனால் அவர்களில் 225 பேர் மட்டுமே மாற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

மாற்று பாராளுமன்றமும் மாதத்தின் 08 நாட்கள் கூடும். அரசாங்கத்தில் உள்ள அமைச்சுகளின் எண்ணிக்கைக்கு சமமான அமைச்சர்களைக் கொண்ட நிழல் அமைச்சரவையும் மாற்று பாராளுமன்றத்தில் மூத்த உறுப்பினர்களுடன் நியமிக்கப்படுவர். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்படும் அமைச்சுக்களின் செயற்பாடுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாற்று பாராளுமன்றத்தின் சபாநாயகர், அவைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவராக சில மூத்த எம்.பிக்களை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, தற்போது பாராளுமன்றத்தில் செயற்பட்டு வரும் பொது நிறுவனங்கள் குழு (COPE) மற்றும் கணக்குகள் குழு (COPA) உள்ளிட்ட பல குழுக்களும் இந்த நிழல் பாராளுமன்றத்தில் நிறுவப்படுவதாக அறியப்படுகிறது.

இந்த மாற்று பாராளுமன்றத்துக்கு முன்னாள் ஜனாதிபதிகளும் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்படுவார்கள் . உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மூத்த அரச தலைவர்களும் இலங்கையின் மாற்று பாராளுமன்றத்தில் உரையாற்ற வாய்ப்பு வழங்கப்படும் என்றும் மேலும் அறியப்படுகிறது.

### முன்னாள்...

உதிரிப்பாகங்கள் கொண்டு பொருத்தப்பட்ட ட்ரக் வண்டியொன்று, கடந்த மாதம் ஹப்புத்தளையில் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டிருந்தது.

அதனையடுத்து குறித்த வண்டியின் உரிமையாளரான முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவிடம் கடந்த 14ஆம் திகதி பாணந்துறை வலான மோசடித்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

விசாரணையின் இடையில் அவருக்கு வயிற்று வலி ஏற்பட்டதையடுத்து விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டு, இன்று (20) அவரை மீண்டும் வலான மோசடித்தடுப்புப் பிரிவில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று அவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### வரலாறை...

இணைக்கப்பட்டபோது, அவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றார்.

இதனையடுத்து, 1965ஆம் ஆண்டில், ஜிசாங் என்ற திபெத் ஒரு தன்னாட்சிப் பகுதியாகவும் சீன மக்கள் குடியரசின் மாகாண அளவிலான பிரிவாகவும் மாற்றப்பட்டது.

இந்தநிலையில், திபெத் பிரச்சினையை ஒரே சீனக் கொள்கையுடன் இணைக்கும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு அறிக்கையின், இலங்கையின் நிலைப்பாட்டை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் உறுதிப்படுத்தியுள்ளார்.

திபெத் சீனாவின் ஒரு பகுதி என்றும் சீனாவைப் பிரிக்க தாங்கள் விரும்பவில்லை என்றும் அவர் கொழும்பின் ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சீனாவின் ஆட்சேபனைகள் காரணமாக, கண்டியின் புனித தந்தம் மற்றும் அநுராதபுரத்தின் ஸ்ரீ மகா போதி ஆகியவற்றை வழிபட தலாய் லாமா விடுத்த வேண்டுகோளை, இலங்கை அரசாங்கங்கள் நிராகரித்தன. ஆனால் திபெத்தின் அரசியல் நிலை குறித்து, இலங்கையின் முன்னைய அரசாங்கங்கள் அமைதியாகவும் உறுதியற்றதாகவும் இருந்தன.

சீனாவுக்கு எதிரான மேற்கத்தேய சக்திகளின் ஆதரவைப் பெற்ற தலாய் லாமாவுக்கு, திபெத்தின் விடுதலைக்கான அவரது அஹிம்சை போராட்டத்துக்காக 1989இல் அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

இந்தநிலையில், கடந்த வாரம் பீய்ஜிங்கில் இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இடையே நடந்த உச்சிமாநாட்டு அளவிலான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில், "இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் முக்கிய நலன்கள் மற்றும் முக்கிய கவலைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் பரஸ்பர ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

**இலங்கையின் ஆதரவு**

இலங்கை, சீனாவின் ஒரே சீனக் கொள்கையை ஆதரிக்கிறது மற்றும் 'தாய்வான் சுதந்திரத்தை' எதிர்க்கிறது. ஜிசாங் மற்றும் ஜின்ஜியாங் தொடர்பான பிரச்சினைகளில் இலங்கை சீனாவை 'உறுதியாக ஆதரிக்கிறது' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இதன்மூலம் சீனா, தாய்வான் பிரச்சினையை திபெத் பிரச்சினையுடன் சமன்படுத்தி, அதை ஒரே சீனக் கொள்கையின் கீழ் கொண்டு வந்துள்ளது என்று இராஜதந்திர ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முன்னதாக திபெத் பிரச்சினையை இலங்கையுடனான கூட்டு அறிக்கைகளில் கொண்டு வருவதற்கான சீனாவின் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இந்நிலையில் தற்போது வெளியிடப் பட்டுள்ள இரண்டு நாடுகளுக்கான கூட்டறிக்கையில், திபெத் மற்றும் உய்குர் என்ற சொற்களுக்கான குறிப்புகளை கைவிட்டுள்ள சீனா, அவற்றுக்குப் பதிலாக ஜிசாங் மற்றும் ஜின்ஜியாங் என்ற பெயர்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

ஜின்ஜியாங் என்பது பெரும்பாலும் முஸ்லிம் மாகாணமாகும், அங்கு உய்குர் பிரிவினைவாத குழுக்கள் பீய்ஜிங்கிலிருந்து சுதந்திரத்துக்காகப் போராடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கை ஜனாதிபதியின் சீனாவுக்கான அரசமுறை விஜயத்துக்கு முன்னதாக, ஒரே சீனக் கொள்கையின் நீண்டகால நிலைப்பாட்டை இலங்கையின் அமைச்சரவை அங்கீகரித்திருந்தது.

எனினும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீனப் பயணத்துக்கு முன்னதாக அறிவிக்கப்பட்ட ஒரே சீனக் கொள்கைக்கான அமைச்சரவை ஒப்புதலில் ஜிசாங் மற்றும் ஜின்ஜியாங் பற்றிய குறிப்புகள் உள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

# அறுவடை காலத்தில் பெய்த மழையால் அழிவடைந்த வயல்கள்

## கிளிநொச்சி விவசாயிகள் கவலை





(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சியில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக கால போக அறுவடைக்கு தயாரான நிலையில் காணப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதாக மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக இரணைமடு குளம் திறந்து விடப்பட்டுள்ளமையால் அதன் நீர் வெளியேறுகின்ற பகுதிகளுக்கு அண்மையாக உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அவ்வாறே ஏனைய குளங்களும் வான் பாய்வதனால் அந்தந்த பிரதேசங்களில் உள்ள அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்பட்ட வயல்கள் அழிவடைந்துள்ளன.

இதற்கப்பால் மழை காரணமாக வயல்களில் நீர் நிரம்பி இருப்பதனால் நெற்கதிர்கள் நீரில் மிதக்கின்றன. இதனால் அறுவடை செய்ய முடியாத நிலையில் அந்த வயல்களும் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கும் விவசாயிகள் இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை தமக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

# நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் 54 பிரதான நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு



நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் பிரதான 73 நீர்த்தேக்கங்களில் 54 நீர்த்தேக்கங்களில் வான் பாய்வதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் பொறியியலாளர் (நீர் முகாமைத்துவம்) எச்.எப்.பி.எஸ்.டி.ஹேரத் நேற்று (19) தெரிவித்தார்.

இவற்றில் அம்பாறை மாவட்டத்தின் 08 நீர்த்தேக்கங்கள், அநுராதபுரம் மாவட்டத்தின் பிரதான 10 நீர்த்தேக்கங்கள், பதுளை மாவட்டத்தின் 06 நீர் நிலைகள், மட்டக்களப்பு, திருகோணமலை, பொலனறுவை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் தலா 04 பிரதான குளங்களும் குருணாகல் மாவட்டத்தின் 05 குளங்களும் புத்தளம் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் தலா 02 பிரதான நீர்த்தேக்கங்களும் கண்டி மாவட்டத்தின் 03 பிரதான நீர்நிலைகளும் காலி மாவட்டத்தின் ஒரு நீர்த்தேக்கமும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதான நீர் நிலைகளுமாக மொத்தம் 54 நீர் நிலைகளில் வான் பாய்வதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் நடுத்தர அளவிலான குளங்கள் 43 இற்கும் அதிகமானவற்றில் வான் பாய்வதுடன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்த்தேக்கங்களில் சேமித்து வைக்கக்கூடிய முழு நீரின் கொள்ளளவில் 93% வீதத்துக்கும் அதிகமானவற்றை தற்போது சேமித்து வைப்பதற்கு முடிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முள்ளியவளை நாவல்காடு வீதியைப் புனரமைக்க ரவிகரன் எம்.பி. நடவடிக்கை







(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - முள்ளியவளை வடக்கில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நாவல்காடு வீதி மற்றும் குஞ்சுக்குளத்தின் வாய்க்கால் என்பவற்றைச் சீரமைப்பதற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

முள்ளியவளைப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற ரவிகரன் எம்.பி.பாதிப்பு நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தார்.

இதன்பின்னரே குறித்த வீதி மற்றும் குளத்தின் வாய்க்கால் என்பவற்றை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முள்ளியவளை, நாவல்காடு வீதியானது ஒவ்வொரு வருடமும் வெள்ள அனர்த்தம் ஏற்படும்போது மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்ற நிலைமை காணப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில் ஒவ்வொருமுறையும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட பின்னர், அக்கிராம மக்கள் ஒன்று சேர்ந்து குறித்த வீதியை தற்காலிகமாக சீரமைத்துப் பயன்படுத்தி வருகின்ற அவலநிலையே தொடர்ந்தும் இருந்துவந்துள்ளது.

குறித்த வீதியினை பெருமளவான மாணவர்களும் விவசாயிகளும் பயன்படுத்தி வருவதுடன், கோயில், தேவாலயம், இறுதிக்கிரியை என்பவற்றுக்கு பொதுமக்கள் பயன்படுத்துகின்ற பிரதான பாதையாகவும் இருந்துவந்துள்ளது.

இந்நிலையில் இம்முறை ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது குறித்த வீதியானது மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வீதியைப் பயன்படுத்தும் கிராம மக்களும் பாடசாலை மாணவர்களும் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வந்துள்ளனர்.

அதேபோல் குறித்த பகுதியில் அமைந்துள்ள குஞ்சுக்குளத்தின் வாய்க்கால் சீரின்மையால், குறித்த வாய்க்காலின் அருகிலிருக்கின்ற குடியிருப்புப் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தின்போது மண்ணரிப்பு ஏற்படுகின்ற பாதிப்பு நிலைமைகளும் காணப்பட்டு வந்துள்ளது.

இந் நிலையில் இந்த விடயங்கள் தொடர்பில் அப்பகுதி மக்கள் ரவிகரன் எம்.பிக்கு முறையீடு செய்ததற்கமைய, கடந்த வியாழக்கிழமையன்று குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்ற எம்.பி. நிலைமைகள் குறித்து ஆராய்ந்திருந்தார்.

இந்நிலையில் குறித்த குஞ்சுக்குளத்தின் வாய்க்காலை சீரமைப்பது தொடர்பில் முள்ளியவளை கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தருடன் பேசியதைத் தொடர்ந்து குறித்த வாய்க்கால் சீரமைக்கப்படுமென கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, குறித்த நாவல்காடு வீதி சீரமைப்பு தொடர்பில் கடந்த கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ரவிகரன் எம்.பி. பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் மற்றும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன், குறித்த வீதிச் சீரமைப்புக்கான மகஜரும் ரவிகரன் எம்.பியால் கையளிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் தப்பியோட்டம்



அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

மற்றொரு சந்தேகநபர் பொலிஸ் காவலில் இருந்து நேற்று முன்தினம் (18) இரவு விடுவிக்கப்பட்டபோது, சந்தேக நபர் தப்பிச் சென்றதாக அம்பலாந்தோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தப்பியோடிய நபர் ஹெரோயின் வைத்திருந்தமைக்காக கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவரைப் பிடிக்க பொலிஸார் சிறப்பு விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

# புதையல் தோண்டிய ஐவர் கைது

(மஸ்கெலியா நிருபர்)

பொகவந்தலாவையில் புதையல் தோண்டிய ஐவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிலுள்ள பிரிட்வெல்வத்த பகுதியில் இச் சம்பவம் நேற்று முன்தினம் (18) இடம்பெற்றுள்ளது.

இது குறித்து பொகவந்தலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் சுமார் 40 முதல் 48 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், அனைவரும் பொகவந்தலாவை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புதையல் தோண்டிய உபகரணங்கள் அனைத்தும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# வீதியை விட்டு விலகி ஆற்றில் பாய்ந்த கார்

## இருவர் பலி – ஒருவர் மாயம்



பன்வில பகுதியில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி ஆற்றில் பாய்ந்ததில் காரில் பயணித்த இருவர் உயிரிழந் துள்ளதுடன், மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளதாக பன்வில பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் 82 வயதான கபுருகெட்டியே பிரேமசுந்தர மற்றும் பெத்தேகம தவலம்தானையில் வசிக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியையான ஆர்.ஜி.கருணாவதி என்ற 77 வயதுடைய அவரது மனைவியும் ஆவார்.

உயிரிழந்த தம்பதியினர் கண்டி பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் மனைவியின் தாய் மற்றும் தந்தை என பொலிஸார் தெரிவிக்கின்றனர். சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேலதிக விசாரணைகளை பன்வில பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2025 பிப்ரவரி மாதம் 10 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

**எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது**

**தங்க கடன் பிரிவு**
**வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ**
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 ஜனவரி 20ஆம் திகதி திங்கட்கிழமை

# ஜனாதிபதி கவனத்தில் எடுக்கவேண்டிய புவிசார் அரசியல் யதார்த்தம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முதல் இரு உத்தியோகபூர்வ சர்வதேச இருதரப்பு ஊடாட்டங்களும் எமது பிராந்தியத்தில் புவிசார் அரசியல் போட்டா போட்டியில் ஈடுபட்டுவரும் ஆசியாவின் இரு வல்லாதிக்க நாடுகளுக்கான விஜயங்களாக அமைந்தன. இந்தியாவுக்குச் சென்று திரும்பி சரியாக ஒரு மாதம் கடந்த நிலையில் கடந்த வாரம் ஜனாதிபதி சீனாவுக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

இலங்கை ஜனாதிபதிகள் பதவியேற்ற பிறகு தங்களது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக புதுடில்லிக்கு செல்வதை ஒரு பாரம்பரியமாகப் பேணிவருகிறார்கள். அதைப் பின்பற்றி ஜனாதிபதி திசாநாயக்கவும் டிசம்பரில் புதுடில்லிக்குச் சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பிறகு தனது விஜயம் வெற்றிகரமானதாக அமைந்ததாக அறிவித்தார். இப்போது பெய்ஜிங் சென்று சீனத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பிறகு சீன விஜயமும் வெற்றிகரமானதாக அமைந்ததாக அவர் அறிவித்திருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதிகள் வேறெந்த நாட்டுக்கும் செய்யும் விஜயங்களை விடவும் அவர்களின் இந்திய, சீன விஜயங்கள் சர்வதேச இராஜதந்திர மற்றும் அரசியல் வட்டாரங்களினால் உன்னிப்பாக நோக்கப்படுவது வழமை. அவ்வாறே இவ்விரு நாடுகளுக்குமான ஜனாதிபதி திசாநாயக்கவின் விஜயங்களும் நோக்கப்பட்டன. இலங்கையில் அவற்றின் பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களைப் பேணிப்பாதுகாப்பதில் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் நிலவும் போட்டா போட்டியே அதற்கு பிரதான காரணமாகும்.

பாரிய பொருளாதார நெருக்கடியில் மூழ்கியிருக்கும் இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு ஆசியாவின் இவ்விரு பெரிய நாடுகளினதும் உதவியும் ஆதரவும் முக்கியமானவை. பெரிய கடனுதவிகள் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடுகள் மூலமாக சீனா இலங்கையில் அதன் செல்வாக்கை ஏற்கனவே அதிகரித்திருக்கிறது. இலங்கையின் மிகப்பெரிய இருதரப்பு கடன்வழங்கும் நாடாக சீனாவே விளங்குகிறது.

ஆனால், பொருளாதார உதவிகளை வழங்குவதில் சீனாவுடன் போட்டிபோட முடியாத இந்தியா மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத வகையிலான பொருளாதார நெருக்கடி திறந்துவிட்ட வாய்ப்பைப் பயன்படுத்தி நிதியுதவியையும் பொருளுதவியையும் வழங்கியது. இரு நாடுகளுக்கும் மேற்கொண்ட விஜயங்களின்போது ஜனாதிபதி திசாநாயக்க பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக பெருவாரியான உடன்படிக்கைகளைச் செய்திருக்கிறார்.

இரு நாடுகளுடனுமான உடன்படிக்கைகளையும் கூட்டறிக்கைகளையும் ஒப்பீடு செய்து எது கனதியானது என்று ஆராய்வதில் இப்போது இராஜதந்திர மற்றும் அரசியல் வட்டாரங்களும் அரசியல் அவதானிகளும் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர். வார இறுதியில் ஊடகங்களும் அதற்கே பெரும் முக்கியத்துவத்தைக் கொடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதியின் சீன விஜயத்தின் விளைவாக சீனக் கம்பனிகளிடமிருந்து சுமார் 1000 கோடி அமெரிக்க டொலர்கள் முதலீடுகளை கவரக்கூடிய வாய்ப்பை இலங்கை பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்திய விஜயத்தின்போது இந்தியாவிடமிருந்து ஜனாதிபதியினால் பெறக்கூடியதாகவிருந்த பொருளாதார உதவி உத்தரவாதங்களை விடவும் சீனாவிடமிருந்து அவரால் பல மடங்கு கூடுதலான பொருளாதார உதவி உத்தரவாதங்களைப் பெறக்கூடியதாக இருந்திருக்கிறது என்பது வெளிப்படையானது.

புதுடில்லிக்கு திசாநாயக்க மேற்கொண்ட விஜயத்தின்போது இந்திய அரசாங்கத்துக்கு எத்தகைய உறுதிமொழிகளை அவர் வழங்குவதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று இலங்கை அரசியல் வட்டாரங்களில் காட்டப்பட்டதைப் போன்ற அக்கறையை அவரது சீன விஜயத்தின்போது காணமுடியவில்லை. இது தான் அவ்விரு நாடுகளுடனுமான இலங்கையின் உறவுகள் விடயத்தில் காணப்படுகின்ற பெரிய வித்தியாசமாகும். இந்தியாவின் பொருளாதார உதவிகள், முதலீடுகள் மற்றும் மூலோபாய அக்கறைகள் எப்போதுமே தென்னிலங்கை அரசியல் சமூகத்தினால் சந்தேகத்துடனேயே நோக்கப்படுகின்றன. ஆனால், சீன விவகாரத்தில் அந்தச் சந்தேகத்தைக் காணமுடிவதில்லை.

என்னதான் இலங்கைத் தலைவர்கள் இந்தியாவுடனான வரலாற்று ரீதியான பிணைப்புகளைப் பற்றிப் பெரிதாகப் பேசினாலும், அடிப்படையில் அவர்கள் இந்தியாவின் நோக்கங்களைச் சந்தேகத்துடனேயே அணுகி வந்திருக்கிறார்கள். சீனாவுடனான உறவுகளில் அவர்கள் அத்தகைய மனோபாவத்தை வெளிக் காட்டுவதில்லை. இலங்கைத் தலைவர்கள் இந்தியாவுக்குச் செல்லும்போதும் சீனாவுக்குச் செல்லும்போதும் வேறுபட்ட மனநிலையைக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

அதைக் கையாள்வதில் உள்ள சிக்கல்களை இந்தியத் தலைவர்களும் அறிந்தே வைத்திருக்கிறார்கள். அதன் விளைவாகப் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கைத் தமிழ் மக்களேயாவர். ஏனென்றால், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசாங்கங்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாது ஓர் அணுகுமுறையை புதுடில்லி அண்மைக் காலமாக கையாண்டு வருகிறது. ஜனாதிபதி திசாநாயக்கவின் புதுடில்லி விஜயத்தின்போது சர்ச்சைக்குரிய 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றி பகிரங்கமாகப் பேசுவதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தவிர்த்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

பாரம்பரியமாக இந்தியாவுக்கு விரோதமான ஓர் அரசியல் கொள்கையைக் கொண்டிருந்த ஒரு கட்சியின் தலைவர் என்பதையும் மறந்து திசாநாயக்கவுடனும் அவரது அரசாங்கத்துடனும் இந்திய அரசாங்கம் உறவுகளை வளர்த்துக்கொள்வதற்கு முன்வந்திருக்கின்ற போதிலும், அவரது கட்சி பழைய சிந்தனைகளை முழுமையாகக் கைவிடுவதற்குத் தயாராயிருப்பதற்கான தெளிவான அறிகுறிகளைக் காணமுடியவில்லை. இந்தியாவில் இணங்கிக்கொள்ளப்பட்ட விடயங்களில் சிலவற்றை இலங்கை திரும்பியதும் இலங்கைத் தலைவர்கள் உள்நாட்டில் எதிர்ப்புகளைச் சமாளிப்பதற்காக மறுதலிப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

அந்த வழக்கத்துக்கு இலங்கையின் புதிய அரசாங்கத் தலைவர்களும் விதிவிலக்கானவர்களாக அல்லர் என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், சீனாவில் ஜனாதிபதி திசாநாயக்க இணங்கிக்கொண்ட விடயங்களுக்கு உள்நாட்டில் எதிர்ப்புக் கிளம்புவதற்கு வாய்ப்பே இல்லை என்றே தெரிகிறது. சீனாவுடனும் இந்தியாவுடனும் உறவுகளில் இரு சமநிலையைப் பேணுவதென்பது ஜனாதிபதி திசாநாயக்கவைப் பொறுத்தவரை உண்மையில் கயிற்றில் நடப்பதைப் போன்ற ஒரு செயலாகும். இரு நாடுகளையும் அசௌகரியப்படுத்தாக அணுகுமுறைகளைக் கையாளவேண்டியவராக அவர் இருக்கிறார்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்திய உறுதிப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் இலங்கை மண்ணில் அனுமதிக்கப் போவதில்லையென்று புதுடில்லியில் உறுதியளித்ததைப் போன்றே சீனாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்போவதில்லையென்று பெய்ஜிங்கில் ஜனாதிபதி திசாநாயக்க உறுதியளித்தார்.

அவர் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன்னதாக கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவுகள் தற்போது உன்னதமான ஒரு நிலையில் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். அத்துடன், இந்தியாவின் நலன்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இலங்கை மண்ணில் இடமளிக்கப்போவதில்லை என்ற ஜனாதிபதியின் உறுதிமொழியைப் பொறுத்தவரையிலும் கூட அவரின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்திருப்பதாக உயர்ஸ்தானிகர் கூறினார். இந்தியாவை விடவும் சீனாவுடன் நெருக்கமாக இலங்கை சென்றுவிடக்கூடாது என்ற புதுடில்லியின் அக்கறையை திசாநாயக்கவின் பெய்ஜிங் விஜயத்துக்கு முன்னதாகக் கூறவேண்டிய அவசியத்தை உணர்ந்த காரணத்தினாலேயே அந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பை அவர் ஏற்பாடு செய்தார் என்பதே அரசியல் அவதானிகளின் பரவலான கருத்தாக இருக்கிறது.

இந்தியாவுடனான உறவுகளை விடவும் சீனாவுடனான உறவுகளில் கூடுதல் சௌகரியத்தை இலங்கை அரசாங்கங்கள் கொண்டிருந்திருக்கின்றன என்பது வரலாறு. ஜனாதிபதி திசாநாயக்க இரு நாடுகளுக்குமான தனது விஜயத்தின் பின்னரான காலப்பகுதியில் உறவுகளை எவ்வாறு கையாளுவார் என்பதில் அவரது அரசாங்கத்தின் உறுதிப்பாடும் கூட தங்கியிருக்கிறதென்பது இன்றைய புவிசார் அரசியல் நிலைவரங்களின் பின்புலத்தில் உள்ள நடைமுறை யதார்த்தமாகும்.

# சிறப்பான வரலாறு கண்ட இலங்கை முஸ்லிம்களின் மூதூர் மஜீத்

மூதூர் (கொட்டியாபுரம்) தொகுதியில் 1960ஆம் ஆண்டு போட்டியிட்டு வெற்றிபெற்றதன் மூலம் அரசியலில் தடம் பதித்த ஒலிபரப்பு தகவல் துறை பிரதியமைச்சர் மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத்தின் ஜனன தினம் இன்றாகும்.

நாவல்லான் நாட்டு நலன்காணுஞ் சேவையால் மாவள்ளல் அன்பால் மதிப்புயர்ந்தோன் மாவீரன் மஜீத் ஆவான்.

உலக வரலாற்றில் மனிதர்கள் படைத்த வரலாறுகளுமுண்டு. வரலாறுகள் படைத்த மனிதர்களுமுண்டு. இந்த வகையில், காலத்தால் அழியா வரலாற்றுச் சிறப்புடையோர் பலர் உண்டு. ஆனாலும், ஒரு சிலரே அடிக்கடி நினைவுகூரப்படுகின்றனர்.

இலங்கைத் திருநாட்டில் நம்மிடையே அழியாப்புகழ் ஈட்டிக்கொண்டோரிடையே தனக்கெனத் தனியானதோர் இடத்தை வரித்துக்கொண்டவர் மர்ஹூம் ஏ.எல்.மஜீத் என்றால் அது மிகையாகாது. மூதூர் தொகுதியில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டுள்ள கிண்ணியா பகுதியில் கண்ணியமான ஒரு குடும்பத்தில் பிறந்த அவர், தமது இளம்பராயத்திலேயே தம்முள் புதைந்து கிடந்த சிறப்பியல்புகளை வெளிக்காட்டத் தொடங்கியதோடு, அவற்றைப் படிப்படியாக வளர்த்துக்கொள்வதில் காட்டிய ஈடுபாடு வியக்கத்தக்கதாகவே இருந்தது.

ஈழநாட்டு பண்பாடு, மனிதாபிமானம், ஜனநாயகப் பாரம்பரியம், ஆத்மீகம் போன்ற துறைகளில் உலகளாவிய பெருமையுடன் சகல இன மக்களும் உயிர்களிடத்திலும் பெரும் அன்பும் அக்கறையும் கொண்டவர்களாக விளங்குகிறார்கள். சகோதரத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு முஸ்லிம் மக்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்பது மட்டுமன்றி தமிழினமும் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென முஸ்லிம் - தமிழ் உறவை வளர்த்து உன்னத பாணியில் வீறுநடைபோட்டு அரசியலிலே மங்காத இடத்தில் உள்ளார் புகழ்பூத்த மூதூர் மஜீத்.

**தனிவழியில்...**

தனக்கே தனிவழி என்று வாழ்ந்து காட்டிய மர்ஹூம் ஏ.எல்.மஜீத்தின் நினைவு தினத்தை திருமலை முஸ்லிம் மக்கள் இன்றும் நினைவுகூர்வது - சரித்திரத்தில் பொன் எழுத்தால் பொறிக்கப்பட்ட அரசியல் வாழ்க்கை இன்னும் திருமலையில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் மத்தியில் மங்காத ஒளியாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பதென்பது இறைவன் அவருக்குக் கொடுத்த அருட்கொடை என்றால் மிகையாகாது.

மூதூர் முதல்வரென



செல்லமாக அழைக்கப்பட்ட மஜீத்தின் கனவுகள் இன்று நனவாகிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் மூதூர் மஜீத்தின் இளமைக்காலத்திலிருந்தே ‘என்வழி தனிவழியாகவே இருந்திருக்கிறது’ அந்தத் தனிவழியின் காரணமாகவே அரசியல்துறையையும் இலக்கியத்துறையையும் இரு கண்களாக்கிக்கொண்டார். இவ்விரு கண்களும் மக்களோடு இரண்டறக் கலந்து அரசியல் சேவகனாகி மக்களுக்கு ஊழியம் செய்கின்ற அதேநேரத்தில், இலக்கியம் வாயிலாக அவர்தம் கலாசாரப் பண்பாட்டை வெளிக்கொணர்ந்தார். இத்தனிநோக்கைச் சீர்படுத்த - செம்மைப்படுத்த - வெற்றிபெறவைக்க மூதூர் மஜீத்தின் முதல் பிரவேசமே அகில இலங்கை இஸ்லாமியக் கலைவிழா.

1961ஆம் ஆண்டில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பதியுதீன் மஹ்முத்தீன் தலைமையின்கீழ் நடைபெற்ற கலை விழாவில் தமிழையே முஸ்லிம்களின் போதனை மொழியாகக்கொள்ள வேண்டுமென்றும் இஸ்லாமிய இலக்கியம் முஸ்லிம் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமென்றும் மௌலவிகளுக்கு பயிற்சிக் கலாசாலையோடு அரபிக்கல்வி கலாசாலையொன்றும் நிறுவப்படவேண்டுமென்றும் இவற்றின் மூலமே முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியுமென்றும் பேசிய மர்ஹூம் ஏ.எல்.மஜீத், 10.07.1964இல் தப்ரபேன் ஹோட்டலில் அகில இலங்கை இஸ்லாமியக் கலைவிழாவின் நோக்கம் பற்றியும் இதேபோன்ற விழா ஆண்டுதோறும் ஈழத்தின் பல பாகங்களிலும் நடைபெறவேண்டிய அவசியம் பற்றியும் விளக்கிக்கொண்டிருந்தார். அதன் பிரதிபலிப்புத்தான் இன்று ‘வாழ்வோரை வாழ்த்துவோம்’ தேசிய ரீதியாக நடைபெறும் மீலாத் விழா எடுத்துக்காட்டுகிறது.

அன்று அவர் தேசிய ரீதியாக முன்வைத்த இஸ்லாமியக் கலைவிழா ஈழமணி நாட்டின் வரலாற்றில் திருமலை மாவட்டத்தில் தேசிய மீலாத்விழா கொண்டாடப்படவேண்டுமென்ற அவரது வேண்டுகோளுக்கிணங்க மூதூர், கிண்ணியாவில் திருமலை மாவட்ட முஸ்லிம் மக்களால் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருவதெனும் மூதூர் மஜீத்தின் கனவே மக்கள்சேவை.

இனங்களுக்கிடையே சௌஜன்யம் நிறைந்திருந்தது. எனினும், குறிப்பாக, மூதூர் தொகுதியில் அது குவிந்திருந்தது. தமது தொகுதியின் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் அவர் தம்மையே அர்ப்பணித்துக்கொண்டார். முஸ்லிம்களின் தலைவர்களாகக் கொழும்பிலிருந்து செயற்பட்டுவந்த சேர். ராசிக் பரீட், டாக்டர் எம்.சீ.எம்.கலீல், கலாநிதி பதியுதீன், மஹ்மூத் எம்.எச்.முகம்மட், ஏ.அஸீஸ் போன்றோருடனும் தொழிற்சங்கவாதிகளான ஏ.அஸீஸ் அலவி மௌலானா மற்றும் பலரோடும் அரசியல் வேறுபாடின்றி மிக நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார்.

ஏ.எல்.ஏ. ஒரு சிறந்த மேடைப் பேச்சாளருமாவார். எந்தவொரு விடயத்தையும் தெளிவாக எடுத்துப் பேசக்கூடியவர். சொல்லவேண்டிய கருத்தை எந்தவித தயக்கமுமின்றி ஆணித்தரமாக எடுத்துச் சொல்லக்கூடிய ஆளுமையுடையவர். கன்னித் தமிழை அழகாகக் கையாளுவார்.

**ஒலிபரப்புத் துறையில்...**

ஒலிபரப்புத் துறைக்கு அவர் ஆற்றிய பங்குப்பணி அளப்பரியது. அதிலும் குறிப்பாக, முஸ்லிம் சேவைக்கு புதிய பதவிகள் பலவற்றை உருவாக்கியதோடு மட்டுமன்றி, சமய நிகழ்ச்சிகள் பலவற்றைப் புகுத்துவதற்கும் ஒலிபரப்பும் நேரத்தை நீடிப்பதற்கும் அவர் உதவியுள்ளார். ஒலிபரப்புத் துறையில் மட்டுமன்றி, திருகோணமலை மாவட்டத்தின் அரசியல் அதிகாரியாக விளங்கிய மஜீத், தாம் சார்ந்திருந்த ஸ்ரீல.சு.கட்சிக்கு அப்பழுக்கற்ற ஆதரவைத் தந்திருந்தபோதிலும் முஸ்லிம்களின் நலனை அவர் என்றுமே பேணிக் காத்து வந்திருக்கிறார். அப்துல் மஜீத் ஓர் அலாதியான அரசியல்வாதியாவார். நம்பிக்கையோடும் மன உறுதியோடும் துணிச்சலோடும் அஞ்சாநெஞ்சனாக வாழ்ந்து அளப்பரிய சேவைகள் புரிந்த அன்னாரின் மறைவு ஒரு துன்பியல் சம்பவமாகும்.

இந்நாள் வரை அதற்கான பின்னணியோ சூத்திரதாரியோ உடந்தையானவர்களைப் பற்றியோ சரியான தகவல் கிடைக்காதது அதிர்ச்சியும் வேதனையும் தருவன. எனினும், இழப்பை ஈடுசெய்யத்தான் முடியுமோ? அவரது நாமம் மக்கள் மத்தியில் அன்றும் - இன்றும் - என்றும் நிலைத்திருக்கும் என்பது உறுதி.

இன்றைய நாட்களில் பரவலாக ‘வாழ்வோரை வாழ்த்துவோம்’ நிகழ்வு நாடளாவிய ரீதியாக நடத்தப்படுவதை நாமறிவோம். இதுவொன்றும் புதுமையல்ல. 1964ஆம் ஆண்டுகளில் இதன் மூலகர்த்தாவாக முதன் முதலில் இந்நாட்டுக்கு வாழ்வோரை வாழ்த்துவோம் நிகழ்வை நிகழ்த்திக் காட்டியவர் மர்ஹூம் அப்துல் மஜீத் என்றால் அது மறுக்கமுடியாத உண்மையாகும். இதனோடு இப்போது முஸ்லிம்களின் தனித்துவம் பற்றி விலாவாரியாக அரசியல்வாதிகளின் வாய்களில் புரள்வதை அறிகிறோம். ஆனால், முதன்முதலாக 1960ஆம் ஆண்டுகளில் எம் வழி தனிவழி என்று உரத்துக்கூறியவர் மர்ஹூம் அப்துல் மஜீதே ஆகும்.

ஒட்டுமொத்தமாக முஸ்லிம்களின் தனித்துவம் பற்றி முதன்முதலாக குரல் கொடுத்து இலங்கை பாராளுமன்றத்தில் அதற்கான ஒரு தனி அந்தஸ்தை வழங்கிய மறைந்த அரசியல் தலைவரென்றால் அது மர்ஹூம் மஜீத் என்பதில் எவருக்கும் ஐயமில்லை. இறுதியாக முஸ்லிம்களின் தனித்துவத்தையும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றியும் தனது மரணம் வரை நினைத்துக்கொண்டு வாழ்ந்த தலைவரை நாம் நிரந்தரமாக நினைத்துக்கொள்ளல் காலத்தின் தேவையாகும்.

அன்னாரது அரசியல் பாதையை ஒற்றுமையாக நாம் தொடர்வதுதான் எமது கடமையாகும். அவர் இந்நாட்டுக்கும் மக்களுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் செய்த சேவையை வல்ல இறைவன் பொருந்தியவனாக ஜென்னத்துல் பிரதௌஸ் எனும் சுவனபதியைக் கொடுப்பானாக.

***1976.11.18இல் பாராளுமன்றத்தில் மர்ஹூம் மஜீத் ஆற்றிய உரையில் சிந்திய சில முத்துக்கள்***

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்நாட்டுக்கு வருகைதந்தவர்கள் அரபியர்கள். அவர்கள் இந்த நாட்டைக் கைப்பற்றவேண்டுமென்ற நோக்கோடு இங்கு வரவில்லை. இங்கு வந்த அவர்கள் இந்நாட்டிலுள்ள சிங்கள மக்களோடும் தமிழ் மக்களோடும் இணைந்து போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும் இந்நாட்டைக் கைப்பற்றமுயன்ற போதெல்லாம் சிங்கள, தமிழ் மக்களோடு ஐக்கியப்பட்டு தேசிய விடுதலைக்காகப் போராடினார்கள் என்பதை இங்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். அவர்கள் சிங்கள, தமிழ் மக்களோடு இணைந்து ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்தார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**யூ.எல்.ஏ.மஜீட்**
**சாய்ந்தமருது**

## நக்கல் நமசிவாயம்

**இந்தியாவிலிருந்து ஸ்ரீ லங்காவுக்கு முட்டைகளை இறக்குமதி செய்து ஸ்ரீ லங்காவிலிருந்து சீனாவுக்கு கோழிகளை ஏற்றுமதி செய்யும் அரசாங்கம்தானே இது......**



# இன்றைய நாளில்...

- **1816 – இலங்கையில், கொழும்பில் மோர்பஸ் வாந்திபேதி நோய் முதல் தடவையாக அடையாளம் காணப்பட்டது.**
- **1887 – பேர்ள் துறைமுகத்தை கடற்படைத் தளமாகப் பயன்படுத்த அமெரிக்க செனட் அனுமதியளித்தது.**
- **1906 – வாரன்ஸ் சர்க்கஸ் யாழ்ப்பாணம் வந்திறங்கியது. இதுவே அந்நகரம் கண்ட முதலாவது வட்டரங்கு (சர்க்கஸ்) ஆகும்.**
- **1913 – யாழ்ப்பாணம், உடுவிலில் இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.**
- **1929 – வெளிப்புறக் காட்சிகளைக் கொண்ட முதலாவது முழு நீளத் திரைப்படமான ‘இன் ஓல்ட் அரிஸோனா’ (In Old Arizona) திரையிடப்பட்டது.**
- **1995 – திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இரு நாட்கள் பயணமாக இலங்கை வந்து சேர்ந்தார் .**
- **2009 – பராக் ஒபாமா அமெரிக்காவின் முதலாவது ஆபிரிக்க - அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.**

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் தை மாதம் 07ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்** நோயிலிருந்து விடுதலை உண்டு. நீண்ட நாள் சத்துருக்கள் உங்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள்.

**ரிஷபம்** புத்திரர்களால் வீண் பிரச்சினைகள் உருவாகலாம். தேவையற்ற பயணங்களால் செலவுகள் உண்டு. அதிர்ஷ்டத்தை சோதிக்காதீர்கள்.

**மிதுனம்** வீடு வாகனங்களால் வீண் செலவினங்கள், வீண் தொல்லைகள் ஏற்படலாம். தாயின் உடல் நிலையில் அக்கறை செலுத்துங்கள்.

**கடகம்** மனத்துணிவுடன் எதையும் சாதிப்பீர்கள், நண்பரிடமிருந்து நீங்கள் கேட்ட உதவிகள் இன்று கிடைக்கப் பெறும்.

**சிம்மம்** வீண் வாத விவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கட்டாயச் செலவினங்களால் சிக்கல் உண்டு. டென்ஷன் வேண்டாம்.

**கன்னி** உடல் நோய்கள் குணமடையும் நாள். எந்தச் சவால்களையும் முறியடிப்பீர்கள். எதிரிகளுக்கு ஒரு முடிவு கட்டுவீர்கள்.

**துலாம்** வெளியிடத்தில் அல்லது குடும்பத்தில் அவமானம் ஏற்படும். வீண் அலைச்சல்களால் உடல் அசதி.

**விருச்சிகம்** கடந்த நாட்களில் உங்கள் கைநலுவிப் போனவை மீண்டும் கிடைக்கும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள்.

**தனுசு** புகழ், கீர்த்தி, செல்வாக்கு உயரும். செய் தொழிலில் திட்டமிட்ட இலாபங்களை அடைவீர்கள். வியாபார மேன்மை உண்டு.

**மகரம்** தடைப்பட்டிருந்த உங்கள் வெளிநாட்டுப் பயணம் சிறப்பாக அமையும். பூர்வீக சொத்துகளால் சங்கடங்கள் தோன்றும்.

**கும்பம்** கடுமையான அலைச்சலுடன், காரியக் கேடும் ஏற்படும். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**மீனம்** உங்கள் எதிர்கால துணைவியை சந்திப்பீர்கள். பங்கு வியாபாரத்தில் எண்ணிய இலாபத்தை அடைவீர்கள்.

**திதி:**சஷ்டி மு.ப.9.58 வரை பின் சப்தமி
**நட்சத்திரம்:**அஸ்தம் மு.இ.8.30 வரை பின் சித்திரை
**பிறை:**தேய்பிறை
**யோகம்:**மரண யோகம் முழுவதும்
**வார சூலை:**கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:**முற்பகல் - 12.27 – 1.27 மணி வரை
**ராகு காலம்:**7.57 – 9.27 மணிவரை
எமகண்டம் :10.57– 12.27 மணிவரை
**குளிகை :**1.57 – 3.27 மணிவரை
**சந்திராஷ்டமம்:**கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 8.30 மணிவரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**இன்று முன்னிரவு 8.30 மணிக்குமேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# பாவற்குளத்தின் நீர்வரத்து அதிகரிப்பு: நான்கு வான்கதவுகள் திறப்பு

## மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை





பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதனால் அதன் 04 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன், பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளளவான 19.4 அடியை அடைந்துள்ளதால், அதன் நான்கு வான் கதவுகள் 06 அங்குலத்துக்கு திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்ப்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5, 6, 4, 2, 1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும் முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

அத்துடன், நெளுக்குளம் - நேரியகுளம் வீதி ஊடாக பயணிப்பவர்களும் அவதானமாக போக்குவரத்தை மேற்கொள்ளுமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

# போலி ஆவணம் தயாரித்து அரச காணியை விற்பனை செய்து மோசடி

## அரச உத்தியோகத்தர் கைது

அரச காணி ஒன்றினை போலி ஆவணம் தயாரித்து 22 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று (19) கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பம்பைமடு பகுதியில் உள்ள அரச காணி ஒன்று போலி ஆவணங்கள் மூலம் 22 மில்லியன் ரூபாவுக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உத்தியோகத்தரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மலையகத்தில் பெய்துவரும் தொடர் மழை; 04 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(எம்.ஏ.அமீனுல்லா)

மலையகத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு நேற்று (19) முதல் 24 மணி நேர மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8.00 மணிமுதல் இன்று காலை 8.00 மணி வரைக்கும் இந்த அபாய எச்சரிக்கை அமுலில் இருக்கும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் கண்டி மாவட்ட பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

கண்டி, மாத்தளை, பதுளை, குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பறை, மெததும்பறை, தொலுவை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மாத்தளை மாவட்டத்தில் லக்கல-பல்லேகம, பல்லேபொல, அம்பன் கங்கைகோரல, மாத்தளை, நாவுல பதுளை மாவட்டத்தில் பதுளை, பசறை, ஹாலி - எல குருநாகல் மாவட்டத்தில் ரிதிகம ஆகிய பிரதேசங்களுக்கும் அதனை அண்மித்துள்ள பகுதிகளுக்கும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

# பனை சார் தொழில்துறை இயந்திரங்களை உருவாக்கும் நிறுவனத்துக்கு பிரதியமைச்சர் பிரதீப் நேரடி விஜயம்





யாழ். மாவட்டத்திலுள்ள பனை சார் தொழில்துறையோடு சம்பந்தப்பட்ட இயந்திரங்களை உருவாக்கும் சிவ கெங்கா இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்கு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேற்று (19) நேரடியாக சென்று பார்வையிட்டார்.

இதன்போது பனை அபிவிருத்தி சபை தலைவர் சகாதேவனும் கலந்துகொண்டார்.

இவ்விஜயத்தின் போது, அமைச்சர் நிறுவனத்தின் தலைவருடன் கலந்துரையாடி, எதிர்காலத்தில் தனது அமைச்சின் கீழ் இவ்வாறான இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த சந்திப்பு, பனை சார் உற்பத்தி தொழில்நுட்ப வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் நிறுவனங்களின் திறன் மற்றும் வளர்ச்சிக்கான புதிய வழிகளைக் காண்பிக்கும் ஒரு உறுதியான ஆரம்பமாக மாறியுள்ளது.

# ரயில் சாரதிகள் விடுமுறை; 28 ரயில் சேவைகள் இரத்து

ரயில் சாரதிகள் பணிக்கு சமுகமளிக்காததால் நேற்று (19) 28 ரயில் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, பிரதான பாதையில் 16 பயணங்களும் கடலோர பாதையில் 08 பயணங்களும் புத்தளம் பாதையில் 04 பயணங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

களனி பள்ளத்தாக்கு வழித்தடத்தில் ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படாது என்றும் இரத்துச் செய்யப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் ரயில்வே தொழிற்சங்கங்கள் நேற்றுக் காலை (19) தெரிவித்துள்ளன.

# நயப்பனையில் சிறுத்தை உயிரிழந்த நிலையில் மீட்பு



(தலவாக்கலை நிருபர்)

புசல்லாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நயப்பனை மேல் பிரிவு தோட்டத்தில், தேயிலை மலையிலிருந்து உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக போடப்பட்டிருந்த கம்பி வலையில் சிறுத்தை சிக்கி உயிரிழந்திருக்கலாம் என ரன்தெனிகல கால்நடை வைத்திய பிரிவின் கால்நடை வைத்தியர் அகலங்க பினிடிய தெரிவித்தார்.

மேலும், உயிரிழந்த சிறுத்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரன்தெனிகல கால்நடை வைத்திய பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 2025ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தில் பதிவான முதல் சிறுத்தை மரணம் இதுவெனவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கண்டி - மஹியங்கனை பிரதான வீதியை பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி - மஹியங்கனை பிரதான வீதியின் 18ஆவது வளைவுப் பகுதியில் கற் பாறைகள் விழும் அபாயம் உள்ளதால் போக்குவரத்தினை மேற்கொள்பவர்கள் மிகவும் அவதானமாக செல்லுமாறு கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு (18) முதல் பெய்து வரும் தொடர் மழையினால் கஹட்ட கொல்ல உட்பட பல இடங்களில் பாறைகள் சரிந்து வீழ்ந்துள்ளமையினால் குறித்த வீதியைப் பயன்படுத்துவது அபாயகரமானது எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர தலைமையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதியில் உள்ள ஆபத்தான இடங்களை சீர்செய்த போதிலும் மழை குறையாததால் மண்சரிவு மற்றும் பாறைகள் விழும் அபாயம் மீண்டும் ஏற்பட்டுள்ள அதேவேளை, குறித்த வீதியில் பயணிப்போர் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு மாவட்ட செயலாளர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# தொடர் மழையால் யாழில் 222பேர் பாதிப்பு!

## பாதிக்கப்பட்டோருக்கு அத்தியாவசியப் பொருட்கள் கையளிப்பு



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் பெய்த மழை மற்றும் வீசிய பலத்த காற்றினால் 49 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/68 கிராம சேவகர் பிரிவில் 48 குடும்பங்களைச் சேர்ந்த 217 பேரும், ஜே/69 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 05பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 49 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்த அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி வைத்தார்.

# முச்சக்கரவண்டி ஓட்டப் பந்தயம்: கிரிபத்கொடையில் 14 பேர் கைது

கிரிபத்கொட, ஹுணுப்பிட்டிய புதிய வீதியில் பந்தயத்துக்கு தயாராகிக்கொண்டிருந்த இரண்டு முச்சக்கரவண்டிகளுடன் 14 இளைஞர்கள் நேற்று (19) அதிகாலை கிரிபத்கொடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கொழும்பு, மாளிகாவத்தை மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.

கிட்டத்தட்ட இரவு நேரங்களில் முச்சக்கரவண்டிகளை அதிவேகமாக ஓட்டி அதிக சத்தம் எழுப்பிச் செல்வதாக அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து அதற்கமைய இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தேசிய மக்கள் சக்தியின் மக்கள் குறைகேள் சந்திப்பு



(பு.கஜிந்தன்)

கோப்பாய் பிரதேசத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளை கேட்டு அறியும் நோக்குடன், தேசிய மக்கள் சக்தியின் மக்கள் குறைகேள் சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பில், பிரதேச மக்களின் வாழ்வாதாரத் தேவைகள், கல்வி, வேலைவாய்ப்பு, நீர்ப்பாசனப் பிரச்சினைகள், விவசாயம் தொடர்பான அடிப்படை வசதிகளின் குறைபாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி நேரடியாக மக்களுடன் உரையாடி, அவர்களின் பிரச்சனைகளை கேட்டறிந்து கொண்டார். மக்களின் குறைகளை தீர்க்கும் நோக்கில் தன்னுடைய முழுமையான அர்ப்பணிப்பை வழங்குவதாக அவர் உறுதியளித்தார்.

# குருநாகல் வீடொன்றிலிருந்து 280 மில்லியன் ரூபா பணம் மீட்பு



குருநாகலில் வீடொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட ரூ. 280 மில்லியன் பணத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் போதைப்பொருள் கடத்தல்காரரான 'ரன் மல்லி' என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். இவர் தப்பியோடிய குற்றவாளியும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'ஹரக் கட்டாவின்' நெருங்கிய கூட்டாளியும் ஆவார்.

போதைப்பொருள் கடத்தலில் இருந்து கிடைத்த வருமானம் என்று நம்பப்படும் இந்தப் பணம், மடகாஸ்கரில் இரத்தினக் கற்களை வாங்குவதுடன் தொடர்புடைய மோசடி நடவடிக்கையில் பயன்படுத்தப்பட வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் போதைப்பொருள் கடத்தல்காரரிடமிருந்து இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட பணத்தில் இதுவே மிகப்பெரிய தொகை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் மறைந்திருப்பதாகக் கூறப்படும் ரன் மல்லியைக் கைதுசெய்வதற்கான முயற்சிகள் நடந்து வரும் நிலையில், இதன்போது சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# தம்பதியர் நஞ்சருந்தி தற்கொலை

## பன்னல காட்டுக்குள் இருந்து சடலங்கள் மீட்பு

நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொண்ட இளம் தம்பதியரின் சடலங்கள், பன்னல பிரதேச காட்டுக்குள் இருந்து நேற்று (19) மீட்கப்பட்டுள்ளன.

பன்னல, கங்காணியம்முல்ல காப்புக்காடு பிரதேசத்தில் இளம் தம்பதியொன்று உயிரிழந்த நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 37 வயதான ஆண் மற்றும் 32 வயதான பெண்ணொருவரின் சடலங்களே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அவர்கள் இருவரும் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதுடன் உயிரிழந்த ஆண், இராணுவ வீரரெனவும் உயிரிழந்த பெண் ஆசிரியர் எனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பன்னல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சவூதி அரேபியாவின் அனுசரணையில் 15 மில்லியன் பரிசுத் தொகையுடன் இன்று நிறைவடையும்
# இரண்டாவது தேசிய அல் - குர்ஆன் மனனப் போட்டியின் பரிசளிப்பு விழா






## மன்னர் பஹத் அல் - குர்ஆன் அச்சகம்...





புனித குர்ஆன் மற்றும் அதனது மொழிபெயர்ப்புகள், அதனது விளக்க நூல்கள், அதனுடன் தொடர்புடைய கலைகள் என்பவற்றுக்கான இஸ்லாமிய உலகில் அதிகரித்து வரும் தேவையை நிறைவேற்றும் முகமாக மதீனத்து மண்ணில் சவூதி அரேபியா உருவாக்கியுள்ள பிரமாண்டமான திட்டமே மன்னர் பஹத் அல் - குர்ஆன் அச்சகமாகும்.

புனித அல்-குர்ஆன், அல்லாஹ்வின் இறுதி வேதம். எமது வழிகாட்டி. அதனை மனனமிட வைப்பது, அச்சிடுவது, அதன் போதனைகளை எத்திவைப்பது போன்ற பாரிய சேவைகளின் அடிப்படையிலேயே மன்னர் பஹத் அல் - குர்ஆன் அச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது.

1985ஆம் ஆண்டு மதீனா மாநகரில் சுமார் 2,50,000 சதுர மீற்றர் பரப்பளவில் 'மன்னர் பஹத் அல்-குர்ஆன் அச்சகம்' என்ற உலகின் மிக பிரமாண்ட வளாகத்தை நிறுவியது முதல் இன்றுவரை மில்லியன் கணக்கான அல் - குர்ஆன் பிரதிகளை அச்சிட்டு உலகெங்கும் இலவசமாக விநியோகித்து வருகின்றது சவூதி அரேபியா.

2019 வரை சுமார் 300 மில்லியன் அல் - குர்ஆன் பிரதிகள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. தற்போது ஒவ்வொரு ஆண்டும் 18 மில்லியன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன.

மன்னர் பஹத் அல் - குர்ஆன் அச்சகம் கீழ்வரும் விடயங்களை நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றது.

- இஸ்லாமிய உலகில் புகழ்பெற்ற அறிவிப்புகளுடன் (றிவாயாத்) புனித குர்ஆனை அச்சிடுதல்.
- பிரபலமான அறிவிப்புகளின் அடிப்படையில் புனித குர்ஆன் ஓதுவதை பதிவு செய்தல்.
- திருக்குர்ஆனின் அர்த்தங்களையும் அதன் விளக்கத்தையும் மொழிபெயர்த்தல்.
- புனித குர்ஆனின் அறிவியலில் கவனம் செலுத்துதல்.
- சுன்னா மற்றும் நபியின் வாழ்க்கை வரலாற்றில் கவனம் செலுத்துதல்.
- இஸ்லாமிய ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளில் கவனம் செலுத்துதல்.
- பல்வேறு வெளியீடுகள் மூலம் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள முஸ்லிம்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- உலகளாவிய வலைப்பின்னல்கள் ஊடாக அச்சகத்தின் வெளியீடுகளைத் தரவிறக்கம் செய்தல் போன்றவையே அச்சகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

சவூதி அரேபியாவின் இஸ்லாமிய விவகாரங்கள், அழைப்பு மற்றும் வழிகாட்டுதல் அமைச்சகமே மன்னர் பஹத் அச்சகத்தை மேற்பார்வை செய்து வருகிறது.


பல்வேறு வகையான முக்கியமானதும் பிரதானமானதுமான கீழ்வரும் குழுக்கள் உருவாக்கப்பட்டு, நுணுக்கமான முறையிலும் அறிவியல் சார்ந்த அடிப்படையிலும் குறித்த அச்சகம் இயங்கி வருகின்றது.

- அச்சகத்துக்கான உயர் சபை.
- அச்சகத்துக்கான அறிவியல் கவுன்ஸில்.
- குர்ஆனை மீளாய்வு செய்வதற்கான அறிவியல் குழு
- மொழிபெயர்ப்பு மையம்
- குர்ஆன் ஆய்வு மையம்
- டிஜிட்டல் ஆராய்ச்சி மையம்
- பயிற்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு

மன்னர் பஹத் அல் - குர்ஆன் அச்சகத்தின் மூலம் அல்-குர்ஆனுக்கு சவூதி அரேபியா செய்து வரும் இம்மகத்தான சேவையை இலகுவில் மறந்துவிட முடியாது.

**- அபூ அரீஜ் -**

## புனித அல் - குர்ஆனுக்கான சவூதி அரேபியாவின் பங்களிப்பு







இரண்டு புனித மசூதிகளின் தற்போதைய சேவகர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸின் ஆட்சிக்காலம்வரை உலகில் எந்த நாடும் செய்யாத சேவைகளைப் புனித அல் - குர்ஆனுக்கு அந்நாடு செய்துள்ளது.

மதீனாவில் உள்ள புனித அல் - குர்ஆனை அச்சிடுவதற்கான கிங் ஃபஹத் மையம் அல்லாஹ்வின் வேதத்தை அச்சிட்டு உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்களுக்கு பல்வேறு பதிப்புகள் மற்றும் விவரிப்புகளில் விநியோகிப்பதுடன் அதன் அர்த்தங்களை பல சர்வதேச மொழிகளில் மொழிபெயர்த்து அவற்றையும் முற்றிலும் இலவசமாக விநியோகித்து வருகின்றது. ஏகத்துவச் சொல்லை - சவுத் காலத்திலிருந்தே இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் வியக்கத்தக்க பல்வேறுபட்ட சேவைகளைச் செய்வதில் அந்நாடு ஆர்வம்காட்டி வருகின்றது.

இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு சேவை செய்வதில் ராஜ்யம் அதன் முன்னோடி பங்கை நிறைவேற்றுவதால், அல் - குர்ஆனை அச்சிடும் இம்மையம் நிறுவப்பட்டுள்ளது. இரண்டு புனித மசூதிகளின் பாதுகாவலர், மன்னர் ஃபஹத் பின் அப்துல் அஜிஸ் ஆலு ஸுஊத் - புனித குர்ஆனுக்கு சேவை செய்வதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்தார் என்பதன் வெளிப்பாடே இம்மையத்தின் உருவாக்கமாகும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள முஸ்லிம்களுக்கு புனித குர்ஆனை பாதுகாத்தல், அச்சிடுதல் மற்றும் அல்லாஹ்வின் வேதம் மற்றும் அவனது தூதரின் சுன்னா கடைபிடிக்கப்படுகின்றது என்பது இம்மையத்தின் மூலம் தெளிவாகின்றது.

உள்ளூர் மற்றும் சர்வதேச புனித அல் - குர்ஆன் போட்டிகளை சவூதி அரேபியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் இஸ்லாமிய விவகாரங்கள், அழைப்பு மற்றும் வழிகாட்டல் அமைச்சகம், ஆண்டுதோறும் நடத்திவருகின்றது

உலகெங்கிலும் உள்ள ஏராளமான நாடுகளின் பங்கேற்புடன் புனித குர்ஆனை மனப்பாடம் செய்யவும்- ஓதவும்- விளக்கவும் அமைச்சகத்தால் நடத்தப்படும் இந்த குர்ஆன் போட்டிகள் அவர்களின் பணிக்கு முன்னோடியாக உள்ளன.

அந்த வரிசையில் எமது இலங்கையிலும் இரண்டாவது தடவையாக இன்று தேசிய அல்-குர்ஆன் மனனப் போட்டியை அந்நாடு நடத்தி முடிக்கின்றது,

புனித வேதமாகிய அல் - குர்ஆன் சவூதி அரேபியாவின் ஆட்சியாளர்களிடையே பெரும் முக்கியத்துவத்தையும் உயர்ந்த அந்தஸ்தையும் கொண்டுள்ளது. அந்நாடு மன்னர் அப்துல் அஜிஸின் மூலம் நிறுவப்பட்டது முதல் ஊக்குவித்து அதன் கொடியை உயர்த்தி அதன் குறிக்கோள்களை உலகுக்கு உணர்த்தி அதன் இலக்குகளை உலகறியச்செய்த ராஜ்யத்தைப் பொறுத்தவரை அல் - குர்ஆனுக்கான இச்சேவை ஆச்சரியமான ஒன்றல்ல. அந்நாட்டின் ஸ்தாபகரான மன்னர் அப்துல் அஜிஸ் பின் அப்துல் ரஹ்மான் அல் விநியோகித்தல் போன்ற நோக்கத்துக்காக இந்த மையம் நிறுவப்பட்டுள்ளது. ஏனெனில் இஸ்லாமியர்கள் இந்த மையத்தை சவூதி இராச்சியத்தின் சேவைகள் பிரதிபலிக்கும் முக்கியமான பிரகாசமான வடிவங்களில் ஒன்றாக கருதுகின்றனர். சவூதி அரேபியாவின் கொள்கையிலும் நடைமுறையிலும்

எனவே, அந்நாட்டின் ஆட்சியாளர்களுக்கு அல்லாஹ் அருள்புரிந்து அவர்களின் மகத்தான சேவைகளைப் பொருந்திக்கொள்வானாக!

**எம்.எவ்.எம். ஹஸன் மாரிஸ் மதனி**











**அஷ்ஷெய்க் ஹசன் பாரிஸ் (BA), அஷ்ஷெய்க் பாஹிர் சுபைர் (BA), அஷ்ஷெய்க் பவ்ஸுல் அலவி (BA), அஷ்ஷெய்க் லபர் அஜ்வாத் (BA), அஷ்ஷெய்க் ரபீஸ் அப்துல்லாஹ் (BA).**

சவூதி அரேபியாவின் பூரண அனுசரணையில் இலங்கை முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பங்களிப்புடன் சுமார் 15 மில்லியன் பரிசுத் தொகையுடன் இன்று நிறைவடையும் இரண்டாவது தேசிய அல் - குர்ஆன் மனனப் போட்டியின் நிறைவையிட்டு சவூதி அரேபிய அரசுக்கும் குறிப்பாக, இரு புனித ஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மானுக்கும் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மானுக்கும் சவூதி அரேபிய இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சர் கலாநிதி அப்துல் லத்தீப் ஆளுஸ் ஷேய்க்குக்கும் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் அல் - கஹ்தானிக்கும் இலங்கை முஸ்லிம்கள் சார்பாக எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**படங்கள் மற்றும் தகவல்களுடன்**
**கலாநிதி அம்ஜத் ராஸிக் (PhD)**

# கந்தளாய் குளத்தின் மேலும் இரு வான் கதவுகள் திறப்பு



(சீனக்குடா செய்தியாளர்)

கந்தளாய் குளத்தின் பத்து வான் கதவுகளில் இரண்டு வான் கதவுகள் கடந்த வாரம் திறக்கப்பட்டுள்ள அதேவேளை, நேற்று (19) மேலும் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் ஒரு அடி நீரை வெளியேற்றிய அதேவேளை, நேற்று இரண்டு அடி நீரை வெளியேற்றுவதற்காகத் திறக்கப்பட்டுள்ளது. கந்தளாய் குளத்தின் தற்போதைய மொத்த நீரின் கொள்ளளவு 1,14,000 ஏக்கர் அடியாகும். தற்போது கந்தளாய் குளத்தில் 1,04,375 கன அடி நீர் உள்ளதால், மேலதிகமான நீரை வெளியேற்றுவதற்காக மேலும் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டதாக கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் சிந்தக்க சுரவீர தெரிவித்தார்.

தற்போதுள்ள குளத்தின் நீர்மட்டத்தைக் குறைக்கவேண்டிய தேவை ஏற்பட்டதாலும் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தைத் தடுப்பதற்காகவும் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நீர்ப்பாசன பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

குளத்திலிருந்து மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றமையால் குளத்தின் கீழ்ப்பகுதியில் வாழுகின்ற மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சேனாநாயக்க சமுத்திரத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றம்

## பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை







(அட்டாளைச்சேனை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக இம்மாவட்டத்தின் டி.எஸ்.சேனாநாயக்க சமுத்திரத்தின் ஐந்து வான்கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருப்பதால் இம்மாவட்டத்தில் உள்ள தாழ்நிலப் பிரதேசங்களில் உள்ள மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் நியாஸ் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் முற்றாக மூழ்கியுள்ளன. கன மழை காரணமாக அம்பாறை - கண்டி பிரதான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளதால் அம்பாறை மாவட்டத்திலிருந்து கண்டி நோக்கி பயணிக்கும் பயணிகள் வேறு போக்குவரத்து பாதையினை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, களியோடை ஆற்றுப் பகுதியினை அண்டியுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் சுமார் 10 ஆயிரம் மாணவர்களையும் வெள்ள நிலைமையிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு அங்குள்ள விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைப்பதற்கான நடவடிக்கையினையும் மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக நிருவாகத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த 24 மணி நேரத்தில் அம்பாறை மாவட்டத்தின் எக்கல்ஓயா பகுதியில் 123.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளதுடன், இங்கினியாகலை பிரதேசத்தில் 120.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் அம்பாறை நகர்ப் பகுதியில் 103.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பன்னலகம பகுதியில் 100.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பொத்துவில் பிரதேசத்தில் 71.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

பலத்த மழையினால் அம்பாறை நகரிலிருந்து ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரிப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள சுதுவெல்ல பகுதியில் உள்ள நீர் நிலை முழுமையாக நிரம்பியுள்ளதனால் இப்பிரதேசத்துக்கு செல்கின்ற மக்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுதவிர, ஒலுவில் அஷ்ரஃப் நகர்ப் பிரதான பாதை சிதைவடைந்துள்ளதனால் இப்பகுதி மக்களும் பாதுகாப்பாக செயற்படுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

டி.எஸ்.சேனாநாயக்க சமுத்திரத்தின் மூலமாக வெளியேற்றப்படும் மேலதிக நீர் கல்லோயா ஆற்றின் மூலம் பிரதானமாகச் செல்வதனால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான அம்பாறை, தமண, மகாஓயா, உகன, சம்மாந்துறை, காரைதீவு, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, இறக்காமம், திருக்கோவில், பொத்துவில் உள்ளிட்ட பிரதேசங்களில் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு மதஸ்தலங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் மூலமும் ஒலிபெருக்கி வாயிலாகவும் அறிவுறுத்தப்படுகின்றன.

அதிக மழை வீழ்ச்சி காரணமாக இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட ஆயிரக்கணக்கான விவசாயச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளன. அறுவடைக்குத் தயாராக இருந்து நெல் விவசாயச் செய்கைக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கடற்றொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் தமது மீன்பிடிப் படகுகள், வள்ளங்கள் போன்றவற்றை கடற்கரையிலிருந்து அப்புறப்படுத்தி கரையொதுக்கி வைத்துள்ளனர். கடல் அலைகளின் வீரியம் இம்மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுவதால் கடல் அலை சுமார் 15 அடிக்கு மேல் எழுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் முதலைகள், பாம்புகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் விச ஜந்துக்கள் போன்றவற்றின் நடமாட்டம் அதிகமுள்ளதனால் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வெள்ள நிலைமையினை பார்ப்பதற்காக செல்பவர்களும் நீர்ப் பகுதிகளில் தேவையற்ற வகையில் நடமாடுவதுடன் நீராடுவதை தவிர்ப்பதோடு, கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமஷ்டி முறையிலான தீர்வையே அரசியல் தீர்வாக வலியுறுத்துகிறோம்

## மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் எம்.பி. சுமந்திரன் தெரிவிப்பு



(கிண்ணியா செய்தியாளர்)

"கட்சியின் ஒரே இலக்கு சமஷ்டி முறைத் தீர்வே ஆகும். தற்போது ஒற்றையாட்சியென்றால் என்ன, சமஷ்டி முறையென்றால் என்ன என்பது பற்றிய விளக்கம் தெரிகிறது. எழுபது வருட காலமாக பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ள போதிலும், அரசியல் தீர்வாக இதனையே வலியுறுத்தி வருகிறோம்"- என யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலையில் சனிக்கிழமை(18) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

"கட்சியின் ஒரே இலக்கு சமஷ்டி முறைத் தீர்வே ஆகும். தற்போது ஒற்றையாட்சி என்றால் என்ன, சமஷ்டி முறை என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம் தெரிகிறது. எழுபது வருட காலமாக பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ள போதிலும், அரசியல் தீர்வாக இதனையே வலியுறுத்தி வருகிறோம். கோட்டாபய அரசாங்கத்தில் இது தொடர்பான வரைபை வரைந்து இது குறித்த தீர்வு தொடர்பில் முன்மொழிவுகளை 2020 டிசம்பர் மாதமளவில் அந்தக் குழுவுக்கு அனுப்பியிருந்தோம்.

இதில் மறைந்த தலைவர் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சித்தார்த்தன், அடைக்கலநாதன் போன்றோர் உட்பட கையொப்பமிட்டு அனுப்பப்பட்டு சந்திப்பு நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து தற்போது ஏழு பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளோம். இவர்கள் இந்த விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்து செயற்படுவார்கள். தமிழ் பேசும் பரப்பில் உள்ள மற்றைய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக கட்சியின் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. அத்தனை வழக்குகளையும் முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாகவும் பேசப்பட்டதுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அதிகமாக முன்னுரிமை அடிப்படையில் முன்னர் வேட்பு மனு தாக்கல் செய்தவர்களை பட்டியலில் இணைப்பதுடன் இளைஞர்களுக்கும் வாய்ப்புகளை வழங்குவது தொடர்பாகப் பேசப்பட்டது.

மேலும் கட்சிக்கெதிராக செயற்பட்டவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதுமாகப் பேசப்பட்ட நிலையில் முதன் முதலில் அவர்களிடம் விளக்கம் கோரப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். ஜனாதிபதியின் இந்திய விஜயம் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சாரிக் கொள்கை கொண்ட இவர்கள் சீனா, இந்தியா தொடர்பில் எப்படி செயற்படப் போகிறார்கள் என்பது பற்றி பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்'' - என்றார்.

# இலங்கை சாரணர் சங்கத்தின் பொங்கல் விழா





(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

இலங்கை சாரணர் சங்கத்தின் தேசிய பொங்கல் விழா மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கொட்டும் மழைக்கு மத்தியில் சாரணர் சங்க மட்ட. கிளையின் ஏற்பாட்டில் சனிக்கிழமை(18) இடம்பெற்றது.

அதிதிகள் அனைவரும் மலர் மாலை அணிவித்து சாரணர் சின்னம் பொறிக்கப்பட்ட கழுத்துப்பட்டியும் வழங்கி காந்தி பூங்கா வரை சாரணர் மாணவர்களின் கலாசார வாத்திய இசையுடன் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளீதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக இலங்கை சாரணர் சங்க மட்டக்களப்பு தலைவர் வை.ஜெயசந்திரன், சாரணர் பயிற்றுவிப்பாளர் தினேஷ் மானவடு, விசேட விருந்தினர்களாக மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் என்.தனஞ்சயன், உள்ளூராட்சி பிரதி ஆணையாளர் எஸ்.பிரதீபன், மட்டக்களப்பு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.ரவிராஜ் மற்றும் என்ர வேள்ட் அமைப்பின் நிறுவுனர் கு.விக்னராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாணவர்கள் மத்தியில் கோலம் போடுவதை



ஊக்குவிக்கும் முகமாக கோலப் போட்டியும் இடம்பெற்றது. அத்துடன், சாரணர் சங்கம் மாவட்டத்தில் வளர்ச்சிபடைய ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# ஐரோப்பிய நாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி போலி விசாவை காண்பித்து 65 இலட்சம் ரூபா மோசடி

## சந்தேக நபருக்கு எதிர்வரும் 24வரை விளக்கமறியல்

(தீகவாபி செய்தியாளர்)

ஐரோப்பிய நாடொன்றுக்கு நபரொருவரை அனுப்புவதாகக் கூறி போலி விசாவைக் காண்பித்து அவரிடமிருந்து 65 இலட்சம் ரூபா பணத்தைப்பெற்று மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயத்தில் பணத்தைப் பறிகொடுத்ததாகக் கூறப்படும் நபர், விசேட குற்ற விசாரணைப் பிரிவின் அம்பாறை அலுவலகத்தில் 2024.12.11ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார். அதற்கமைய, விசேட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைக்கமைவாக அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரை சந்தேகத்தின் பேரில் 2025.01.16ஆம் திகதி பொலிஸார் கைது செய்து 2025.01.17ஆம் திகதி அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இதனுடன் தொடர்புபட்ட மற்றொரு சந்தேக நபரும் அம்பாறை விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் 2024.06.10ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கைது நடவடிக்கையானது 2024.06.10ஆம் திகதி விசேட குற்ற விசாரணைப் பிரிவில் செய்யப்பட்ட மற்றொரு முறைப்பாட்டுக்கமைவாக இடம்பெற்றிருந்தது. இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த மோசடிகளுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பிரதான சந்தேக நபருக்கு எதிராக சம்மாந்துறை நீதவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பிரதான சந்தேக நபர் என சந்தேகிக்கப்படுபவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர் என்றும் பிரித்தானியாவில் குடியுரிமை பெற்று தற்போது இலண்டனில் வசித்துவருவதாகவும் விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# கந்தளாயில் உணவகங்கள் திடீர் பரிசோதனை: மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகளும் கைப்பற்றல்

(சீனக்குடா செய்தியாளர்)

கந்தளாய் பிரதேசத்தில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் உணவகங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஆரோக்கியமான வாழ்வை உறுதிப்படுத்து வோம் என்ற தொனிப் பொருளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கந்தளாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாினி சமன் தலைமையில் கந்தளாய் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின்போது 46 கடைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. சுகாதாரமற்ற சிற்றுண்டிகள் மற்றும் ஏனைய உணவுகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களையடுத்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் உணவக உரிமையாளர்களுக்கும் உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளைப் பேணி உணவுகளைத் தயாரிக்குமாறும் உணவகங்கள் சுத்தமில்லாதிருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்த மில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப் பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன் அறிவித்தல்களைப் பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கந்தளாய் நகரம், பேராறு, வெண்டாரசன்புர, வான்எல, ரஜஎல, வட்டுக்கச்சி, அக்போபுர போன்ற பிரதேசங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது, பேக்கரிகள், உணவகங்கள், பலசரக்குக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் மற்றும் மரக்கறிக் கடைகள் உட்பட உரிய தரம் இல்லாத 08 கடைகளுக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் முறையற்ற களஞ்சியங்களைக் கொண்ட உணவகங்கள் வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள் கைப்பற்றப்பட்டதாகவும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# தமிழன் வணிக உலகம்
## Thamilan Business World
www.thamilan.lk businessthamilan@gmail.com

## Hemas Pharmaceuticals 1990 சுவ செரிய அறக்கட்டளையுடன் கைகோர்க்கிறது



Hemas Pharmaceuticals 1990 சுவ செரிய அறக்கட்டளையின் Adopt an Ambulance முன்முயற்சிக்கு ரூ.10 மில்லியனை நன்கொடையாக வழங்கி இரண்டு அம்பியூலன்ஸ்களுக்கு நிதியளித்தது. மொரட்டுவ மற்றும் பேலியகொட பிரதேசங்களுக்குள் இயங்கவுள்ள இந்த அம்பியூலன்ஸ்கள் உடனடி மருத்துவ உதவிக்கான சமூக அணுகலை விரிவுபடுத்தும் அதேவேளை, வாகனங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பராமரிப்புக்கு வளங்கள் பயன்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்தும்.

Hemas Pharmaceuticals, 1990 சுவ செரிய அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்ததன் மூலம் அவசரகால சேவைகளுக்கான அணுகலை இலகுபடுத்தி சுகாதார அமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

1990 சுவ செரிய அறக்கட்டளைக்கு வழங்கப்பட்ட நன்கொடையைப் பற்றி கருத்துத் தெரிவித்த Hemas Pharmaceuticals (Pvt) Ltdஇன் நிர்வாக இயக்குனர் ஜூட் பெர்னாண்டோ, "தொழில்துறையில் முன்னணி வர்த்தகநாமமாக, 1948ஆம் ஆண்டு முதல் 76 வருடங்களாக நாட்டுக்கு மருந்துகளை விநியோகித்து வரும் Hemas Pharmaceuticals இலங்கையின் சுகாதாரத் துறையை அபிவிருத்தி செய்வதில் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. தேசத்தின் கூட்டு நல்வாழ்வுக்கு ஆதரவளிப்பதிலும் பாதுகாப்பதிலும் 1990 சுவ செரிய அறக்கட்டளையின் முயற்சிகள் முக்கிய பங்கு ஆற்றுவதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். பகிரப்பட்ட இலக்குகளைக் கொண்ட குழுவாக, இலங்கையின் சுகாதார அமைப்பின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்கு அறக்கட்டளையின் பங்களிப்பை ஆதரிக்க Hemasஇல் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். பயனுள்ள மற்றும் அணுகக்கூடிய சுகாதார சேவையைப் பெறுவதற்கான உலகளாவிய உரிமையை எடுத்துக்காட்டும் ஒரு முன்முயற்சியின் தொடர்ச்சிக்கு நிதியுதவி செய்வதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்" - என்றார்.

## 30 ஆண்டுகால நம்பிக்கையைக் கொண்டாடும் Maliban Kiri



1992இல் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் Maliban Kiri, இலங்கையின் பால் உற்பத்தித் துறையில் நம்பிக்கைக்குரிய பெயராக விளங்குவதுடன், 30 ஆண்டுகாலப் பயணத்தின் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அதன் புத்தம் புதிய பொதிகளின் வடிவமைப்பை அண்மையில் வெளியிட்டது. நவீனகால நுகர்வோரின் விருப்பங்களுடன் வர்த்தகக் குறியீட்டின் செழுமைமிக்க பாரம்பரியத்தை இணைக்கும் சமகால வடிவமைப்பைக் காட்சிப்படுத்தி இம்முக்கிய நிகழ்வைக் கொண்டாடும் நோக்கில் மீள் அறிமுக நிகழ்வொன்று இடம்பெற்றது. இந்த மூலோபாய நடவடிக்கை Maliban Kiriயின் பாரம்பரியத்தைக் கௌரவிப்பதோடு மட்டுமல்லாமல், அதன் சந்தை நிலைப்பாட்டை வலுப்படுத்துவதையும் பரந்த வாடிக்கையாளர் தளமொன்றில் அதன் தேவையை விரிவுபடுத்துவதையும் நோக்காகக் கொண்டது.

தாயைப் போன்ற நம்பிக்கை என்ற குறிச்சொல்லுக்குச் சமமான Maliban Kiriதமது பிள்ளைகளுக்கு மிகச் சிறந்ததையே வழங்குவதை நோக்காகக் கொண்ட அர்ப்பணிப்புள்ள இலங்கையின் தாய்மாரின் நம்பிக்கையை வென்ற, குணநலனுடன் கூடிய போஷாக்கின் சின்னமாக நீண்டகாலமாக நிலைத்துள்ளது.

வர்த்தகக் குறியீட்டின் புதிய பொதியமைப்பு அதன் நீடித்த நம்பிக்கையைப் பெற்ற அடிப்படை விழுமியங்களுக்கு உண்மையாக இருப்பதுடன் புத்தாக்கத்துக்கான அதன் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றது.

Maliban Kiriயின் இக் குறிப்பிடத்தக்க மைல்கல் தொடர்பில் Maliban குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான ரவி ஜயவர்தன, "இந்த மீள் அறிமுகமானது, புதிய தோற்றம் என்பதற்கப்பால், தாய்மாரால் நம்பிக்கையை வெல்லக் கூடிய தயாரிப்புகளைத் தயக்கமின்றி வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதி செய்கின்றது"- என்றார்.

## 2024 சாதனைகளின் ஆண்டாகத் திகழும் Asia Asset Finance



நிதித்துறையில் முன்னணி நிறுவனமாக Asia Asset Finance 2024ஆம் ஆண்டில் பல சாதனைகளை எட்டியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.




தனது 54ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் Asia Asset Finance நிறுவனம் நிதி ஸ்திரத்தன்மைக்காக fitch ratings வழங்கிய A+ மதிப்பீட்டையும் பெற்றுள்ளது.

2024ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியாக 100 கிளைகளைத் திறந்துள்ளது. Asia Asset Finance மக்களுக்கு தங்கக்கடன், குத்தகைகள், காணிக்கடன்கள், வெளிநாட்டு நாணய மாற்று மற்றும் நிலையான வைப்பு போன்ற பல நிதிச் சேவைகளை வழங்கி வருகிறது.

நிறுவனம் என்ற ரீதியில் சிறந்த பணிச் சூழலைக் கட்டியெழுப்பியதற்காக 'A Great Place to work' என்ற விருதை வென்றுள்ளது. மேலும் மனித வளத்துறையை முழுமையாக டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையையும் எடுத்துள்ளது.

இந்தியாவின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றாக முத்தூட் பினான்ஸுடன் பத்து வருட பங்காளித்துவத்தைக் கொண்டாடிய நிகழ்வில், நிதி மற்றும் கொள்வனவு பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெருமவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் விதமாக எதிர்காலத் திட்டங்கள் குறித்து கவனஞ்செலுத்தப்பட்டுள்ளதாக Asia Asset Finance நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணியாளரும் பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான ரொஷான் குணசேகர தெரிவித்துள்ளார்.

31/12/2024 நிலைவரப்படி 2024/2025 நிதியாண்டின் நிகர இலாபம் 500.9 மில்லயன் ரூபா என்றும், மொத்த சொத்து 34.4 பில்லியன் ரூபா என்றும், பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் விகிதம் 17.97%என்றும் Asia Asset Finance நிறுவனம் தெரிவிக்கின்றது.

## நிலைபேறான சுற்றுலாவுக்கு SLT-MOBITEL பங்களிப்பு



மாசற்ற இயற்கைச் சூழல் மற்றும் பிரத்தியேகமான உயிரியல் பரம்பல் போன்றவற்றுக்கான UNESCO உலக மரபுரிமைத் தலங்களில் ஒன்றான ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவில் மெருகேற்றப்பட்ட அடையாளமிடலை SLT-MOBITEL வெற்றிகரமாக நிறுவியுள்ளது. விருந்தினர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்கான SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பை இந்த நடவடிக்கை மேலும் உறுதி செய்துள்ளதுடன், சூழல்சார் சுற்றுலா மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகளை இந்தப் பாதுகாக்கப்பட்ட பகுதியில் ஊக்குவிப்பதற்கான அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளது.

SLT-MOBITEL இன் ESG செயற்றிட்டமாக, ஹோட்டன் சமவெளி பகுதியில் சூழல்சார் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை மேம்படுத்த நிறுவனம் எதிர்பார்ப்பதுடன், வருடாந்தம் இந்தப் பகுதிக்கு விஜயம் செய்யும் 2,00,000 க்கும் அதிகமான விருந்தினர்களுக்கு தெளிவான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்பார்க்கின்றது. முன்னர் காணப்பட்ட கூட்டாண்மை வர்த்தக நாமம் பொறிக்கப்பட்ட அடையாளத்துக்குப் பதிலாக புதிய அடையாளம் அமைந்திருப்பதுடன், சூழல்சார் வழிகாட்டல் மற்றும் பொறுப்பு வாய்ந்த சுற்றுலாத்துறை ஆகியவற்றில் SLT-MOBITEL காண்பிக்கும் அர்ப்பணிப்பைப் பிரதிபலித்துள்ளது.

SLT-MOBITEL அணியினால் ஹோட்டன் சமவெளிப் பகுதியைச் சேர்ந்த வன ஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரியிடம் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டமைக்கான ஆதார ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதனூடாக திட்டம் உத்தியோகபூர்வமாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளமை அடையாளமிடப்பட்டுள்ளதுடன், சூழல்பாதுகாப்புச் செயற்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்த கைகோர்ப்பாகவும் அமைந்துள்ளது.

1988 ஆம் ஆண்டு தேசிய பூங்காவாக அறிவிக்கப்பட்ட ஹோட்டன் சமவெளி, வன ஜீவராசிகளின் புகலிடமாகவும், ஆபத்தை எதிர்நோக்கியுள்ள ஜீவிகளின் காப்பிடமாகவும் அமைந்துள்ளது. சமூகத்துடன் தொடர்புகளைப் பேணும் SLT-MOBITEL இன் தொடர்ச்சியான முயற்சிகளின் அங்கமாக இது அமைந்திருப்பதுடன், பெறுமதி வாய்ந்த சூழல் கட்டமைப்புகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த UNESCO இனால் அறிவிக்கப்பட்ட உலக மரபுரிமைத் தலங்களில் ஒன்றுடன் கைகோர்த்துள்ள ஒரே கூட்டாண்மை நிறுவனம் என்பதில் SLT-MOBITEL பெருமை கொள்வதுடன், இலங்கையில் நிலைபேறான சுற்றுலாத்துறைக்கு ஆதரவளிப்பதில் தனது அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளது.

## இரண்டு தங்க விருதுகளை வென்ற PGP Glass Ceylon நிறுவனம்



இலங்கையில் கண்ணாடி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரேயொரு நிறுவனமும் உலகளவில் முன்னிலை வகித்து வருகின்றதுமான PGP Glass Ceylon PLC (PGC), தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளன விருதுகள் (National Chamber of Exporters - NCE) மற்றும் இலங்கை பொதியிடல் விருதுகள் (Sri Lanka Packaging Awards) நிகழ்வுகளில் மதிப்பிற்குரிய இரண்டு தங்க விருதுகளை வென்றுள்ளது. கண்ணாடி உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நிறுவனமாக PGP Glass திகழ்வதையும், உலகத்தரம் வாய்ந்த கண்ணாடி உற்பத்தியின் மையமாக இலங்கையின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதையும் இச்சாதனைகள் வெளிக்காண்பித்துள்ளன.

ஏற்றுமதி அளவுகளின் அடிப்படையில் இலங்கையின் உச்ச ஏற்றுமதியாளர்களில் ஒன்றாக, தேசத்தின் ஏற்றுமதித் துறையை மேம்படுத்துவதில் PGP Glass முக்கிய பங்கு வகித்து வருகின்றது. NCE தங்க விருதானது இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு இந்நிறுவனம் ஆற்றி வருகின்ற மகத்தான பங்களிப்பைச் சுட்டிக்காட்டுவதுடன், அதன் உயர் ரக கண்ணாடி கொள்கலன்கள் 20 க்கும் மேற்பட்ட நாடுகளை எட்டி வருகின்றன.

## 'ஆண்டின் பசுமை வர்த்தக நாமமாக' முடிசூட்டப்பட்ட கொமர்ஷல் வங்கி




இலங்கையின் கொமர்ஷல் வங்கியானது, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் (SLIM) 2024 வர்த்தக நாம சிறப்பு விருதுகளில் நிலைபெறுதகு தன்மைக்கான வங்கியின் அர்ப்பணிப்புக்குப் பொருத்தமான அங்கீகாரமாக இலங்கையின் 'ஆண்டின் பசுமை வர்த்தக நாமத்துக்காக' தங்க விருதை வென்றுள்ளது.

கொமர்ஷல் வங்கியானது தனது சொந்த செயற்பாடுகளுக்கப்பால் நாடு முழுவதிலுமுள்ள சமூகங்களை முன்னிறுத்தி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முயற்சிகளை உள்ளடக்கிய நிலையில் நிலைபெறுதகு தன்மையை மேம்படுத்துவதில் மேற்கொண்டுள்ள கணிசமான முதலீடுகள் மற்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இந்த விருதானது அங்கீகரிப்பதாக உள்ளது.

இந்த நிலைபெறுதகு தன்மைக்கான திட்டங்களில் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வங்கியின் 'தேசத்துக்கான மரங்கள்' திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் 1,00,000 மரங்களை நடும் செயற்றிட்டமானது 12 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டமை மற்றும் இன்னும் மேலதிகமாக 1,00,000 மரங்களை நடுவதற்கான வங்கியின் உறுதிப்பாடு என்பவை முக்கியமானவை.

## புதிய உயர் செயல்திறன் கொண்ட டிராக்டர் டயரை வெளியிட்ட சியெட்



சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனமானது விவசாயத் துறையின் அபிவிருத்தியில் தனது பங்களிப்பை வெளிப்படுத்தும் வகையில், மகா கால பயிர்ச்செய்கைப் பருவத்தின் அறுவடைகால கட்டத்தில், புதிய உயர் செயல்திறன் கொண்ட உழவு இயந்திரத்துக்கான ஜடிராக்டர்ஸ விசேட டயரை அறிமுகப்படுத்தியுள்ளது.

'13.6 - 28 PUDDLE XL TT 12PR' எனப் பொருத்தமாகக் குறியிடப்பட்டிருக்கும் இந்தப் புதுமையான குறுக்கு-பட்டை டயரானது விவசாய டிராக்டர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் விவசாயம் மற்றும் டிராக்டர் செயற்பாடுகளை எளிதாகவும் திறமையாகவும் மேற்கொள்ளும் வகையில் மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் கொண்டு திகழ்வதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய டயரானது பிரபலமான டிராக்டர் வர்த்தகநாமங்களான Sonalika, TAFE, John Deere மற்றும் Mahindra போன்றவற்றுடன் இணக்கமாக உள்ளதுடன் பல்வேறு விவசாயத் தேவைகளுக்கும் பல்துறைத் தெரிவாக உள்ளது.

இந்த டயரானது கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் சறுக்கல் தன்மை குறைந்த ஆழத்தையும் (NSD) கொண்டுள்ளது, புதிய டயர் பயிர்ச்செய்கை செயற்பாடுகளின் போது ஒப்பிட முடியாத செயல்திறனுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் அகலமான மற்றும் கோண வடிவுடைய லக்குகள் சேறு அல்லது ஈரமான நிலைகளில் விதிவிலக்கான இழுக்கும் தன்மையை வழங்குகின்றன. அதே நேரத்தில், உயர் லக் ஆனது இணைப்பு பட்டி செயற்பாட்டின் போது மேம்பட்ட நிலைத்தன்மைக்கு பங்களிக்கிறது. அதன் ஆழமான மற்றும் திறந்த வடிவமைப்பானது சிறந்த சுய-சுத்தம், நிலையான செயல்திறனுக்கான உறுதி, வலுவூட்டப்பட்ட கட்டுமானம், நீண்ட காலத்துக்கு நீடித்து நிற்கும் சேவையை வழங்குவதுடன் பயனாளிகளுக்கு அதிகபட்ச பெறுமதியையும் வழங்குகிறது.



**அண்மையில் கொழும்பு ITC Ratnadipa ஹோட்டலில் இடம்பெற்ற இலங்கையின் அங்குரார்ப்பண Global CEO Awards விருதுகள் இரவில், அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெயலால் ஹேவாவசம் மதிப்புமிக்க Global CEO Leadership Excellence Award விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது.....**




First Capital Holdings இன் பதினோராவது 'First Capital Colombo Investor Symposium' நிகழ்வு அண்மையில் கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் சுமார் 300 விருந்தினர்கள் மற்றும் 400 ஒன்லைன் பங்குபற்றுனர்களுடன் நடைபெற்றபோது....

### பாராளுமன்றம் நாளை முதல் 24 வரை கூடும்:

# கிளீன் ஸ்ரீ லங்கா திட்டம் தொடர்பாக இரண்டு நாள் சபை ஒத்திவைப்பு விவாதம்



பாராளுமன்றம் நாளை செவ்வாய்க் கிழமை 21ஆம் திகதிமுதல் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார். சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கடந்த 10ஆம் திகதி கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாளை (21) மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 06 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.00 மணிமுதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணிமுதல் மு.ப. 11.30 மணிவரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளுங்கட்சியினால் கொண்டுவரப்படும் கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்று, நாளை மறுதினம் (22) இரண்டாவது நாள் விவாதத்துக்காக ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

நாளை மறுதினம் (22) மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணிவரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 06 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 10.00 மணிமுதல் மு.ப. 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளுங்கட்சியினால் கொண்டுவரப்படும் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இரண்டாவது நாளாகவும் இடம்பெறும்.

23ஆம் திகதி வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 06 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.00 மணிமுதல் மு.ப. 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணிமுதல் மு.ப. 11.30 மணிவரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 3.30 வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் 2413/37 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் 2399/16 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் 2384/35 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 2377/39 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. அதனையடுத்து, பி.ப. 3.30 முதல் பி.ப. 5.30 வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக முழு நாளும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர். சம்பந்தன், ருக்மன் சேனாநாயக்க, ரொஜினோல்ட் பெரேரா, சிறினால் த மெல் மற்றும் மொஹமட் இல்யாஸ் ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக அன்றைய தினம் மு.ப. 9.30 முதல் பி.ப. 5.30 மணிவரை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளதுடன், பாராளுமன்றம் கூடும் இந்த நான்கு நாட்களிலும் மதிய உணவு இடைவேளைக்காக பி.ப. 12.30 மணிமுதல் பி.ப. 1.00 மணிவரை ஒதுக்கப்பட்டுள்ளது.

# நாடு முழுவதுமுள்ள நெற்களஞ்சியங்களை துப்புரவு செய்யும் பணிகளில் இராணுவத்தினர்





அரசாங்கத்தினால் கொள்முதல் செய்யப்படும் நெல்லை சேமித்து வைப்பதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள நெற்களஞ்சியசாலைகளை துப்புரவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்கு இராணுவத்தினரைப் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் ஜனாதிபதியும் முப்படைகளின் சேனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ், நாடு முழுவதும் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் கிளீன் ஸ்ரீலங்கா தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த பெரும்போக பருவத்தின் நெல் அறுவடையை கொள்முதல் செய்வதற்கான திட்டத்தை அரசாங்கம் செயற்படுத்த திட்டமிட்டுள்ளதுடன், நெல் கொள்முதல் செய்த பிறகு, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான 209 நெற்களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான நெற் களஞ்சியசாலைகள் மற்றும் சுற்றியுள்ள நிலம் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், அவற்றைப் பயன்படுத்த ஏற்றதாக மாற்றவும் சிறிய பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளவும் அவற்றைச் சுத்தம் செய்ய வேண்டியுள்ளதுடன், தேசிய நலனுக்காக பாதுகாப்புப் படையினர் ஆதரவு வழங்கும் வகையில், பாதுகாப்புச் செயலாளரின் அறிவுறுத்தல்களின்படி, இலங்கை இராணுவத் தளபதியான லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆர்.எஸ்.பீ., சீ.டீ.எப். என்.டி.யூ. பீ.எஸ்.சீ., ஐ.ஜீயின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் 2025 நேற்று முன்தினம் (18) முதல் எதிர்வரும் 27 வரை அனைத்து பாதுகாப்புப் படைத் தலைமையகங்களாலும் நாடு முழுவதும் நெற்களஞ்சியசாலைகளை சுத்தம் செய்யும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதன் ஒரு தொடக்கமாக, நேற்று முன்தினம் இலங்கை இராணுவப் படையினர் பல பகுதிகளில் நெற்களஞ்சியசாலைகளை சுத்தம் செய்தல் மற்றும் பழுதுபார்ப்பதில் பங்களித்தனர்.

# குழந்தை நீரில் அமிழ்த்தி கொலை; சந்தேக நபர் தாய் ஹபரணையில் கைது

(அநுராதபுரம் நிருபர்)

பத்து மாத ஆண் குழந்தையொன்றை நீரில் அமிழ்த்தி கொலைசெய்த சந்தேகத்தின் பேரில் தாய் ஒருவரை ஹபரணை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹபரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பளுகஸ்வெவ பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 16ஆம் திகதி இரவு வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஹபரணை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

உளனகம, பளுகஸ்வெவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட பத்து மாத ஆண் குழந்தை ஒன்றே சம்பவத்தில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

ஹபரணை பொலிஸ் பிரிவின் பளுகஸ்வெவ பகுதியிலுள்ள வீடொன்றில் குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக 17ஆம் திகதி ஹபரணை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்துள்ள குழந்தை தனது தாய், தந்தை மற்றும் சகோதரன் சகோதரியுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் வசித்து வந்ததுடன், தந்தை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ளபோது 16ஆம் திகதி இரவு வீட்டுக்கு பின்னாலுள்ள நீர் நிரம்பிய குழியில் பிள்ளையை போட்டு மீண்டும் நீரிலிருந்து வெளியே எடுத்து வீட்டிலுள்ள கட்டிலில் போட்டுள்ளதாக உயிரிழந்த குழந்தையின் தாய் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதனையடுத்து 34 வயதுடைய குழந்தையின் தாயை ஹபரணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதவான் விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக பொலனறுவை வைத்தியசாலையில் குழந்தையின் சடலம் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியாவில் தொடர்ந்தும் அடை மழை: விவசாய நிலங்கள் - வீதிகள் நீரில் மூழ்கின





(செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக வீடுகள் விவசாய நிலங்கள் மற்றும் போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, நுவரெலியா உடப்புசல்லாவ பிரதான வீதியில் கந்தப்பளை புதிய வீதி பகுதியில் வெள்ள நீர் வீதியினை கடந்து செல்வதனால் போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நுவரெலியா கந்தப்பளை பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் விவசாயம் செய்யும் தாழ் நிலங்களில் தேங்கி நிற்கும் வெள்ள நீரினால் அறுவடைக்கு தயாரான மரக்கறி வகைகள் பாதிக்கும் நிலைக்குள்ளாகியுள்ளதாக பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் கால்வாய்கள் முறையாக புனரமைக்கப்பட்டு பராமரிக்கப்படாததன் காரணமாக அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாய நிலங்களுக்கு அழிவு ஏற்பட்டு மூழ்குவதற்கு முக்கிய காரணம் என விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

தொடர்ச்சியாக பெய்யும் மழை காரணமாக நுவரெலியாவில் பிரதான வீதிகளை பயன்படுத்தும் வாகனச் சாரதிகள் பனி மூட்டம் மற்றும் மழையுடனான காலநிலை நிலவும்போது தமது வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரச் செய்தவாறு பயன்படுத்துவதன் மூலம் விபத்துகளை தவிர்த்துக் கொள்ளலாம் என போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சர்வதேச தரத்தில் புதிய கோல்ஃப் மைதானம்

## சிகிரியாவில் திறந்துவைப்பு



சர்வதேச தரத்துக்கிணங்க சிகிரியாவில் உள்ள இலங்கை விமானப்படை தளத்தில் கட்டப்பட்ட புதிய கோல்ஃப் மைதானமான ஈகிள்ஸ் சிட்டாடல் (Eagles Citadel golf Course), பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவினால் அதிகாரப்பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு முக்கிய சுற்றுலா சொர்க்கமாகக் கருதப்படும் சிகிரியா பகுதியைச் சுற்றி கட்டப்பட்டுவரும் இந்த கோல்ஃப் மைதானம், சிகிரியா விமானப்படை தளத்தின் அழகிய சூழலில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அழகாக கட்டமைக்கப்பட்டுள்ளதோடு, இது கோல்ஃப் வீரர்களுக்கு கோல்ஃப் மைதானத்தை அனுபவிப்பதற்கும் மற்றும் சவாலான போட்டியை அனுபவிப்பதற்குமான வாய்ப்பையும் வழங்குகின்றது. இந்த புதிய கோல்ஃப் மைதானமானது 'தீவு டி' (Island T) மற்றும் 'தீவு பே' (Island Bay) போன்ற இடங்களைக் கொண்டுள்ளது.

இலங்கை விமானப்படையானது திருகோணமலை, அநுராதபுரம் மற்றும் கொக்கல விமானப்படை தளங்களில் மூன்று சர்வதேச தர கோல்ஃப் மைதானங்களைக் கொண்டுள்ளது. மேலும் சிகிரியா விமானப்படை தளத்தில் கட்டப்பட்ட இந்த கோல்ஃப் மைதானம் விமானப்படைக்குச் சொந்தமான நான்காவது கோல்ஃப் மைதானமாகும்.

இந்தப் புதிய கோல்ஃப் மைதானம் கோல்ஃப் விளையாட்டுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. விளையாட்டு உபகரணங்கள், தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் உள்ளிட்ட கோல்ஃப் விளையாட்டுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்காக கட்டப்பட்டுள்ள இந்த கோல்ஃப் மைதானம், கோல்ஃப் விளையாட்டில் ஆர்வமுள்ள எவரும் மைதானத்துக்குள் நுழைந்து விளையாடும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

# தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து: 61 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில்



மாத்தறை - தங்காலை பிரதான வீதியில், கந்தர, தலல்ல பகுதியில், இரு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் சுமார் 61 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திக்வெல்லயிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்ற பஸ், கந்தர, தலல்ல பகுதியில் நேற்று (19) காலை எதிர்த்திசையில் இருந்து பயணித்த மற்றொரு தனியார் பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் கந்தர மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது, மேலும் அவர்களில் அறுவர் மாத்தறை மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து கந்தர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இ.போ.ச. பஸ் நடத்துனர் மீது தாக்குதல்

## நானுஓயாவில் நால்வர் கைது

(தலவாக்கலை நிருபர்)



நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை ஊடாக ஹட்டன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் நடத்துனரை நானுஓயா, கிளரண்டன் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (18) சிலர் தாக்கி காயப்படுத்தியுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பஸ்ஸில் பயணித்த பயணி ஒருவர் பஸ் நிற்கும் முன்னர் பஸ்ஸிலிருந்து இறங்க முற்பட்டபோது தவறி விழுந்ததாகவும் பஸ் நிற்கும்முன் இறங்குமாறு நடத்துனர் எச்சரித்ததையடுத்து இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் மற்றவர்களுக்கு தொலைபேசியில் அறிவித்ததையடுத்து, அவரின் நண்பர்கள் வந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் பஸ் நடத்துனர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதலில் ஈடுபட்ட நால்வர் நேற்றைய தினம் (19) கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் ஒருவர் கைது செய்யப்படவுள்ளதாகவும் நானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளனர். இதன் காரணமாக நுவரெலியாவிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த பயணிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்கிஸ்ஸ துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

## சந்தேகநபர் ஒருவர் கைது



கல்கிஸ்ஸ, சிறிபால மாவத்தையில் நேற்று (19) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி நேற்று (19) உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் படோவிட்ட பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் ஈடுபட்ட துப்பாக்கிதாரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட மற்றய சந்தேக நபரை கைதுசெய்ய கல்கிஸ்ஸ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வாதுவையில் மீன்தொட்டியில் விழுந்து ஒன்றரை வயது குழந்தை பலி

19 மாத குழந்தை ஒன்று வீட்டில் உள்ள மீன் தொட்டியில் விழுந்து உயிரிழந்துள்ளதாக வாதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் வாதுவை, தல்பிட்டிய பகுதியில் வசிக்கும் ஒன்றரை வயது குழந்தையென பொலிஸார் தெரிவித்தனர்.

தாயும் தந்தையும் வீட்டிலிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதுடன், வீட்டின் முன் உள்ள மீன் தொட்டியின் அருகே குழந்தை நின்று கொண்டிருந்த நிலையில், குழந்தை காணாமல் போயுள்ளது.

அவரைத் தேடும் போது குழந்தை மீன் தொட்டியில் கிடப்பதை தாயார் பார்த்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அநுராதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு பெரும்போக நெற்செய்கைக்காக 3000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(அநுராதபுரம் நிருபர்)

பெரும்போக நெற் பயிர்ச்செய்கைக்கு தேவையான உரத்தை கொள்வனவு செய்வதற்காக அநுராதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் மூவாயிரம் மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட கமநல சேவை அபிவிருத்தி உதவி ஆணையாளர் கெலும் திசாநாயக்க தெரிவித்தார்.

மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள 26 கமநல சேவை மத்திய நிலையங்களின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் 2024/2025 பெரும்போகத்தில் ஒரு இலட்சத்து 25ஆயிரத்து 317 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு ஜனவரி மாதம் 16ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு பத்தாயிரம் ரூபா மானியமாக வழங்கப்படுகின்றது. மாவட்டத்திலுள்ள அதிகளவான விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிதிவைப்பு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள விவசாயிகளின் வங்கிக் கணக்குக்கு மிக விரைவில் நிதிவைப்புச் செய்யப்படும்.

இம்முறை பெரும்போகத்தில் ஒரு இலட்சத்து 25ஆயிரத்து 317 ஹெக்டேயரில் நெற்செய்கையும் 29 ஆயிரத்து 477 ஹெக்டேயரில் சோளச் செய்கையும் 4767 ஹெக்டேயரில் உழுந்து பயிர்ச்செய்கையும் 180 ஹெக்டேயரில் பயறும் இம்முறை செய்கை பண்ணப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் கெலும் திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

## வேன்-மோட்டார் சைக்கிள் விபத்து: ஒருவரின் நிலை கவலைக்கிடம்



ஆ.ரமேஸ்

கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு-கண்டி பிரதான வீதியில் யாட்டுச் சந்தியில் நேற்று முன்தினம் (18) இரவு 10.20 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் நபரொருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி கவலைக்கிடமான நிலையில் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கண்டியிலிருந்து கொழும்பை நோக்கி ஒரே திசையில் பயணித்த வேனொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (18) கேகாலை பிரதேசத்தில் அதிகமான மழை பெய்துள்ள நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வேகக் கட்டுப்பாட்டை மீறி பயணித்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்ற வேனை முந்திச் செல்ல முயன்ற வேளையில் வேனுடன் பலமாக மோதி இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. சைக்கிளை செலுத்திச் சென்ற நபருக்கு கால் ஒன்று உடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாடுகளை ஏற்றிச்சென்ற லொறி நானுஓயா குறுக்கு வீதியில் விபத்து: இரு மாடுகள் காயம்





செ.திவாகரன், டி.சந்ரு

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் நேற்று முன்தினம் (18) அதிகாலை மாடுகளை ஏற்றிச் சென்ற லொறியில் திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளானதில் லொறியின் உதவியாளர் பலத்த காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெலிமடை பகுதியிலிருந்து நுவரெலியா வழியாக ஹட்டன் பகுதியிலுள்ள பண்ணையொன்றுக்கு குறித்த மாடுகளை ஏற்றிச்சென்றபோதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளானபோது லொறியினுள் 09 மாடுகள் இருந்துள்ளதாகவும் அவற்றில் 02 மாடுகளுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளமையால் அருகிலுள்ள மிருக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் இரண்டு மாடுகள் மாயமாகியுள்ளதாகவும் அவற்றைத் தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் ஐந்து தொன்களுக்கும் குறைவான பொருட்களையே ஏற்றிச்செல்லும் வகையிலான வாகனங்கள் மாத்திரமே சென்று வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பொலிஸார் இணைந்து இந்த வீதிப்போக்குவரத்து தொடர்பில் சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் ஏராளமான பதாகைகள் வீதியில் இருபுறமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், சட்டங்களை மீறும் சாரதிகள் இந்த வீதியில் ஐந்து தொன்களுக்கும் அதிக எடையுள்ள வாகனங்களைச் செலுத்துவதன் காரணமாகவே அதிக விபத்துகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொலிஸார் மற்றும் பொறுப்பான அதிகாரிகள் இணைந்து நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் செல்லாமல் தடுப்புகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## மலையக மக்களுக்கு தீர்வு இல்லையேல் வீதியில் இறங்குவோம்!

### பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் எச்சரிக்கை



க.கிஷாந்தன்

''மலையக மக்களுக்கான உரிமைகள் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறில்லையேல், வீதியில் இறங்கி போராடவும் தயங்கமாட்டோம்'' - என்று தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான திகாம்பரம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் முக்கிய கூட்டமொன்று நேற்று ஹட்டனில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு எதிர்கால அரசியல் தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து செயற்பாட்டாளர்களுக்கு விளக்கமளித்து உரையாற்றிய திகாம்பரம் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்க்கட்சியில் இருந்தபோது தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு பல உறுதிமொழிகளை வழங்கியது. அக்கட்சியினர் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளனர். ஆனால், அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தேங்காய் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணம் என்பன பாரியளவில் குறைக்கப்படுமெனக் கூறப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. மின்சாரக் கட்டணத்தைக்கூட பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுதான் குறைத்துள்ளது.

தற்போது கூட்டுறவுத் தேர்தல்களில் அரசாங்கம் தோல்வியடைந்து வருகின்றது. எனவே, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் அரசாங்கத்துக்கு இருப்பதால் அரிசி மாபியாவுக்கு முடிவு கட்ட வேண்டும். கொள்ளையர்களைப் பிடிக்க வேண்டும். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை அவதானித்து வருகின்றோம் என்ற அவர், மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும் என்றார்கள். சம்பளம் 02 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றார்கள். அவற்றை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் முழுமையான ஆதரவு வழங்கப்படும். அவ்வாறில்லையேல் வீதியில் இறங்கிப் போராடவும் தயங்கமாட்டோம்" – என்றார்.

## லபுக்கலையில் முச்சக்கரவண்டி விபத்து: மூவர் காயம்!

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லபுக்கலை தேயிலைத் தொழிற்சாலைக்கருகில் நேற்று முன்தினம் (18) மாலை முச்சக்கர வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து நானுஓயா – எடிம்பரோ தோட்டத்தை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி, கண்டி - நுவரெலியா வீதியின் லபுக்கலை தோட்டத் தொழிற்சாலைக்கருகில் பிரதான வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்திலுள்ள தேயிலைத் தோட்டத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சிக்கி பலத்த காயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி உள்ளிட்ட மூவரையும் அப்பகுதி பொதுமக்கள் காப்பாற்றி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுச்சென்றனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முச்சக்கர வண்டியில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவ் விபத்து சம்பவித்ததாக காயமடைந்த சாரதி தெரிவித்தார்.

## கினிகத்தேனையில் உடைந்து விழுந்த உணவகம்: 06 மாணவர்கள் காயம்!

எஸ்.கணேசன், மஸ்கெலியா நிருபர்

கினிகத்தேனை நகரிலுள்ள உணவகமொன்றில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்த அறையொன்று நேற்று முன்தினம் (18) உடைந்து விழுந்ததில் ஆறு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

தரம் 10இல் கல்வி பயிலும் ஆறு மாணவர்கள், கினிகத்தேனை நகருக்கு பிரத்தியேக வகுப்புக்கு சென்றிருந்த நிலையில், குறித்த உணவகத்துக்கு சென்று உணவருந்தியுள்ளனர்.

ஹோட்டலில் இருந்த அறையொன்றின் அடித்தளத்தில் பலகைகள் உடைந்ததையடுத்து மாணவர்கள் கீழே விழுந்துள்ளனர். சுமார் 15 அடிவரையான பள்ளத்துக்கு மாணவர்கள் இழுத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

இதனால் காயமடைந்த மாணவர்கள் பிரதேச வாசிகளால் கினிகத்தேனை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

குறித்த உணவகம் பாதுகாப்பற்ற முறையிலும் சுகாதாரப் பாதுகாப்பின்றியும் இயங்கிவந்துள்ளது என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கினிகத்தேனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



தேசிய மக்கள் சக்தியின் மாவனல்லை தொகுதி மக்கள் இணைப்புக் காரியாலயம் அண்மையில் மாவனல்லை உதுவான் கந்தையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சுற்றாடல் அமைச்சர் டம்மிக படபெந்தி, தேசிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட ஓய்வு பெற்ற முப்படைகளின் கூட்டணித் தலைவர் சிசிர ஹேரத், தேசிய மக்கள் சக்தியின் மாவனல்லை தொகுதி இளைஞர் அமைப்பின் தலைவர் அன்ஷாப் நஸீர் மற்றும் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். (மாவனல்லை செய்தியாளர்)

## தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய தைப்பொங்கல் தேசிய விழா



பு.கஜிந்தன்

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த தேசிய பொங்கல் விழா வெகு விமர்சையாக அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் இடம்பெற்றது.


தேசிய தைப்பொங்கல் விழாவானது காலை 7.30 மணிக்கு தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் சமய வழிபாடுகளுடன் ஆரம்பமாகி பின்னர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வரை ஆன்மீக விழிப்புணர்வு நடைப்பயணத்துடன் யூனியன் கல்லூரியில் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வுகளில் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க உட்பட பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் உட்பட இன்னும் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



பனைசார் உற்பத்தியாளர்கள் மற்றும் பனம் பொருள் ஏற்றுமதியாளர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை(18) பிற்பகல் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தலைமையில் கைதடியில் அமைந்துள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் வைத்து பெருந்தோட்டப் பிரதியமைச்சர் சு.பிரதீப்பை சந்தித்தனர். இதன்போது பனை சார் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பெருந்தோட்டப் பிரதியமைச்சர் பிரதீப்பிடம் எடுத்துரைத்திருந்தனர். (பு.கஜிந்தன்)

## ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினை: போராட்டத்துக்கு தயாராகும் ஆசிரியர் சங்கம்!



பு.கஜிந்தன்

ஆசிரியர்களின் இடமாற்றத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிடின் தொடர்ச்சியான போராட்டத்தையும் யாழ்ப்பாண நகரத்தில் ஊர்வலத்தையும் முன்னெடுப்பதற்கு இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் தயாராகி வருவதாக அந்தச் சங்கத்தின் பொதுச்செயலாளர் சிறிகந்தநேசன் புயல்நேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் ஊடக சந்திப்பு யாழ்ப்பாணம் - மாம்பழம் சந்தியில் உள்ள அலுவலகமொன்றில் சனிக்கிழமை(18) நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''வடக்கு மாகாணத்தில் ஆண்டு தோறும் இடமாற்றம் நடைபெறுகின்றது. இவ்வாறு நடைபெற்றாலும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களிலே பணிசெய்து பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் ஐந்து வெளிமாவட்ட சேவையை நிறைவு செய்த ஆசிரியர்கள் பலர் இருக்கின்றனர். இருப்பினும், குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் நியமனம் பெற்ற ஆசிரியர்கள், வெளிமாவட்ட சேவையை 08 அல்லது 10 வருடங்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள். இதனால் அவர்கள் உள நெருக்கடிக்கும் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளார்கள்.

இடமாற்ற சபையிலே தீர்மானம் எடுக்கப்படுகின்றபோது தேசிய இடமாற்றக் கொள்கையை அடிப்படையாக வைத்து அதற்கேற்ப இந்த இடமாற்றம் வழங்கப்படுவதில்லை.

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களிலும் ஓர் அரசியல் சார்பான நடவடிக்கைகள் இடம்பெற்றன. இப்போதிருக்கின்ற அரசாங்கம் தங்களுக்கு சார்பானவர்களையே பெரிய பெரிய பதவிகளில் அமர்த்துவதுடன், அரசியல் சார்பான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இடமாற்றத்திலேயே அரசியல் சார்பான தொழிற்சங்கங்கள் செயற்பட்டுக்கொண்டு அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

வடக்கு மாகாணத்தில் அண்ணளவாக 17 ஆயிரத்து 500 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இவற்றில் 80 சதவீதமானவர்கள் பெண் ஆசிரியர்கள். அவர்கள் மடு, முல்லைத்தீவு, துணுக்காய் வவுனியா வடக்கு - தெற்கு போன்ற அதி கஷ்டப் பிரதேசங்களில் மிகவும் இன்னல்களைச் சந்திக்கின்றனர்.

இவர்கள் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக வெளிமாவட்டத்தில் வேலை செய்கின்ற போதும் வாழ்வியல் ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதில் முக்கியமாக குறிப்பிடவேண்டிய ஒன்று தற்போது நாட்டில் சனத்தொகை பற்றாக்குறை. இந்த விடயத்தில் இடமாற்றப் பிரச்சினையும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

தற்போதிருக்கின்ற அரசாங்கம் அரசியல் ரீதியான நியமனத்தை வழங்குவதை இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. கடந்த 2021ஆம் ஆண்டு வரலாற்றில் பேசப்படக்கூடிய ஒரு மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றத்தைப் பெற்றுக்கொடுத்தோம்.

இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முறையான நடவடிக்கைகள் எடுக்காவிடின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஆகிய நாங்கள் ஒன்றிணைந்து ஒரு சுகயீன விடுமுறைப் போராட்டத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அலுவலகத்தின் முன்னால் முன்னெடுப்பதோடு, யாழ்ப்பாண நகரில் ஒரு வீதி ஊர்வலத்தையும் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்''- என்றார்.

## கட்டைக்காட்டில் கரையொதுங்கிய மிதவை



பு.கஜிந்தன்

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்கரையில் மிதவை ஒன்று கடந்த சனிக்கிழமை கரையொதுங்கியது.

கடலில் நிலவும் கடும் காற்றால் குறித்த மிதவை கரையொதுங்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் அதேவேளை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இது குறித்து தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கரையொதுங்கிய மிதவையை இராணுவம், கடற்படை, பொது மக்கள் எனப் பலர் பார்வையிட்டு வருவதோடு பொதுமக்களின் உதவியோடு மிதவையை மீட்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் மிதக்கும் கூடாரங்கள், மிதவைகள் போன்றன கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது.



குருநகரில் நேற்றுக்காலை 6.45 மணியளவில் வீசிய பலத்த காற்றால் பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் தேவாலயத்தை அமைச்சர் சந்திரசேகரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த அனர்த்தத்தால் முப்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவிலும் புனித கொலை விலக்கி மாதா ஆலய திருப்பண்ட அறைகள் முற்றாகவும் சேதமடைந்துள்ளன. அத்தோடு, சில படகுகளும் பகுதியளவில் சேதமாகியுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தயாராக உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (பு.கஜிந்தன்)

# அமெரிக்காவின் 47ஆவது....

# ஜனாதிபதியாக ட்ரம்ப் இன்று பதவியேற்பு



## வெள்ளைமாளிகையிலிருந்து வெளியேறுகிறார் ஜோ பைடன்

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இன்று (20) பதவியேற்கவுள்ளார். இந்நிலையில் ஜனாதிபதி ஜோ பைடன் இன்று (20) வெள்ளைமாளிகையிலிருந்து வெளியேறவுள்ளார்.

ட்ரம்ப் பதவியேற்பு விழாவையொட்டி தலைநகரில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக, துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் களமிறங்கிய நிலையில் அவரை எதிர்த்து குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் போட்டியிட்டார். இத்தேர்தலில் கருத்துக்கணிப்புகளை பொய்யாக்கி ட்ரம்ப் வெற்றிபெற்றார். இதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் இன்று (20) பதவியேற்கவுள்ளார். இதற்காக புளோரிடாவிலிருந்து புறப்பட்ட ட்ரம்ப் தலைநகர் வொஷிங்டனுக்கு நேற்றுமுன்தினம் சென்றடைந்தார்.

வொஷிங்டனின் புறநகரில் விர்ஜினியாவின் ஸ்டெர்லிங்கிலுள்ள ட்ரம்ப்பின் தேசிய கோல்ப் கிளப்பில் இரவு விருந்து நிகழ்வு இடம்பெற்றது. இதில் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்கும் ட்ரம்பும் துணை ஜனாதிபதியாகும் ஜே.டி.வான்சும் பங்கேற்று தங்களின் அமைச்சரவை சகாக்களை வரவேற்று விருந்தளித்தனர். இதைத் தொடர்ந்து, நேற்று (19) இராணுவ வீரர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள ஆர்லிங்க்டன் தேசிய கல்லறைக்கு சென்ற ட்ரம்ப் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இந்நிலையில் பதவியேற்பு தினமான இன்று (20) ட்ரம்ப் வெள்ளை மாளிகைக்கு செல்லும் முன்பாக பாரம்பரிய வழக்கப்படி செயின்ட் ஜோன்ஸ் எபிஸ்கோபல் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்வார்.



அதைத் தொடர்ந்து, வெள்ளை மாளிகைக்கு செல்லும் ட்ரம்புக்கு ஜனாதிபதி ஜோ பைடன், அவரது மனைவி ஜில் பைடன் இருவரும் தேநீர் விருந்தளித்து வரவேற்பார்கள். பின்னர், ஜனாதிபதி பைடன், புதிய ஜனாதிபதி ட்ரம்ப்பை பாராளுமன்றத்துக்கு அழைத்துச் செல்வார். அங்கு முறைப்படி 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றுக் கொள்வார். சம்பிரதாயப்படி, தனது முதல் அறிவிப்பு குறித்த ஆவணத்தில் ட்ரம்ப் கையெழுத்திட்டு ஜனாதிபதி பணியை தொடங்குவார்.

பதவியேற்பு விழாவில் முன்னணி தொழிலதிபர்களான டெஸ்லாவின் எலான் மஸ்க், அமெரிக்க இந்திய வம்சாவளி விவேக் ராமசாமி, அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ், மெட்டா சிஇஓ மார்க் ஜூக்கர்பெர்க் மற்றும் பிரபல இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானி உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர். ட்ரம்ப்பின் பதவியேற்பு விழாவையொட்டி வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ட்ரம்ப்புக்கு எதிராக வொஷிங்டனில் பேரணி**

இதேவேளை, இன்று(20) அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்கவுள்ள நிலையில் அவருக்கு எதிராக வொஷிங்டன் டி.சியில் எதிர்ப்பாளர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு நகரங்களிலிருந்து தலைநகரில் குவிந்த அவர்கள் 03 வெவ்வேறு இடங்களிலிருந்து லிங்கன் பூங்கா நோக்கி கையில் பதாகை ஏந்தி பேரணியாகச் சென்றனர்.

''ட்ரம்பிசத்தை'' எதிர்த்து நியூயோர்க் மற்றும் சியாட்டிலிலும் எதிர்ப்பாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். காலநிலை மாற்றம், குடியேற்றம் மற்றும் பெண்களின் உரிமைகள் போன்ற பல்வேறு காரணங்களுக்காக ட்ரம்பை எதிர்ப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 2017ஆம் ஆண்டு அதிபராக ட்ரம்ப் தெரிவுசெய்யப்பட்டபோதும் அவருக்கு எதிராக பெண்கள் மிகப்பெரியளவில் பேரணி நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

**ஜனாதிபதியாக இறுதி பிரிவு உபசார நிகழ்ச்சியில் பைடன்**

இதேவேளை, பதவிக்காலம் நிறைவடைவதையொட்டி, முப்படைகளின் கொமாண்டர் என்ற முறையில் அமெரிக்க ஜனாதிபதியாக தனது இறுதி பிரிவு உபசார நிகழ்ச்சியில் ஜோ பைடன் கலந்துகொண்டார்.

விர்ஜீனியாவில் நடைபெற்ற இந்நிகழ்வில், இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொண்டார். பின்னர், இராணுவ வீரர்களிடையே பேசிய அவர், முப்படைகளின் கொமாண்டர் பொறுப்பு ஏற்றது வாழ்வில் தமக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவம் எனத் தெரிவித்தார்.

ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் இருவருக்கும் பாதுகாப்புத் துறையின் மிக உயரிய சேவைப் பதக்கங்களை பாதுகாப்புத்துறை செயலர் லாயிட் ஆஸ்டின் வழங்கினார்.



# அமுலுக்கு வந்தது காஸா போர் நிறுத்தம்!

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கி டையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்று (19) முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதன்மூலம் 15 மாதங்களாக நீடித்த போர் முடிவுக்கு வந்துள்ளது. நிபந்தனைகள் இருந்தாலும் கூட இப் போர் நிறுத்த ஒப்பந்தம் பல தரப்பிலும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

காஸாவை தளமாகக் கொண்டியங்கும் ஹமாஸ் போராளிகள் கடந்த 2023ஆம் ஆண்டு 07ஆம் திகதி தொடங்கிய போர் 15 மாதங்களாக நீடித்தது. இந்நிலையில் இஸ்ரேலின் தாக்குதலில் 46,899 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 110,725இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், ஓராண்டுக்கும் மேலான போரை நிறுத்த, கடந்த வாரம் அமெரிக்கா, இஸ்ரேல், கட்டார் நாடுகள் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்படி, போர் நிறுத்தக் காலமான 06 வாரங்களுக்கு இருதரப்பினரும் அமைதியாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில், பணயக் கைதிகள் குறித்த விவரங்களை வெளியிடாவிட்டால், போர் நிறுத்தம் அமுலுக்கு வராது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு எச்சரித்திருந்தார்.



இதற்கிடையே, பணயக் கைதிகளின் விவரங்களை இஸ்ரேலிடம் ஹமாஸ் வழங்கியது. இதனையடுத்து, நேற்று (19) நண்பகல் 12 மணியளவில் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வரவேண்டிய நிலையில், சுமார் 03 மணிநேர தாமதத்துக்குப் பின்னர், பிற்பகல் 2.45 மணியளவில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது. போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததையடுத்து, இரு நாடுகளின் பல பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், ஒப்பந்தம் அமுலுக்கு வருவதற்கு முன்னதாக, காலையில் நடந்த 02 மணிநேர தாக்குதலில் 08 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போர் நிறுத்த ஒப்பந்தப்படி, ஹமாஸ் தரப்பினர் 33 பணயக் கைதிகளையும் இஸ்ரேல் தரப்பினர் 737 பலஸ்தீனர்களையும் விடுவிக்கவுள்ளனர். இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் உட்பட 03 அமைச்சர்கள் இராஜிநாமா செய்துள்ளனர்.

## விளையாட்டுத் துளிகள்

ஐ.சி.சியின் டிசம்பர் மாத சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா, அவுஸ்திரேலியாவின் பேட் கம்மின்ஸ், தென் ஆபிரிக்காவின் டேன் பேட்டர்சன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இதில் சிறந்த வீரராக இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேலும் சிறந்த வீராங்கனையாக அவுஸ்திரேலியாவின் அன்னாபெல் சதர்லேண்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

★★★★★★★★★★★★★★★

இந்திய – அயர்லாந்து மகளிர் அணிகளுக்கிடையில் ராஜ்கோட்டில் நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டியில், இந்திய அணி 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்தை வீழ்த்தி ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதேவேளை ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி பெற்ற மிகப்பெரிய வெற்றி இதுதான். இதற்கு முன்பு 249 ஓட்டங்கள் வித்தியாசத்தில் (2017) அயர்லாந்தை வீழ்த்தியது சாதனையாக இருந்தது.

★★★★★★★★★★★★★★

இன்டர்நேஷனல் லீக் ரி20 கிரிக்கெட் தொடரில் அதிவேகமாக (16 பந்துகளில்) அரைச் சதம் கடந்த வீரர் எனும் சாதனையை ஷார்ஜா வோரியர்ஸ் அணிக்காக ஆடிய இலங்கையின் அவிஷ்க பெர்னாண்டோ படைத்தார். அதுமட்டுமல்லாமல், ஒரு இலங்கை துடுப்பாட்ட வீரர் அடித்த அதிவேகமான ரி20 அரைச் சதமும் இதுவாகும். முன்னதாக சசெக்ஸ் அணிக்கு எதிராக 18 பந்துகளில் திலகரட்ன டில்ஷான் இந்த சாதனையை படைத்திருந்தார்.

★★★★★★★★★★★★★★★

மெல்போர்னில் நடைபெற்றுவரும் கிராண்ட்ஸ்லாம் உயரிய அந்தஸ்து பெற்ற ஆஸி. ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டத்தில் நட்சத்திர வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலென்கா - ரஷ்ய வீராங்கனை மிர்ரா ஆண்ட்ரீவாவை வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

# இளையோர் மகளிர் ரி20 உலகக்கிண்ணத்தை அபார வெற்றியுடன் ஆரம்பித்த இலங்கை




***அகீல் சிஹாப்***

மலேஷியாவில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் (19 வயதுக்குட்பட்டோருக்கான) மகளிர் ரி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை மகளிர் அணி தங்களது முதல் ஆட்டத்தில் மலேஷிய அணியை 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வீழ்த்தியது.

16 அணிகளின் பங்கேற்புடன் இரண்டாவது தடவையாக நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் (19 வயதுக்குட்பட்டோருக்கான) மகளிர் ரி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் மலேஷியாவில் ஆரம்பமானது. இதில் குழு ஏ யில் இடம்பிடித்துள்ள இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் நேற்று கோலாலம்பூர், பயூமாஸ் ஓவல் மைதானத்தில் வைத்து மலேஷியாவை எதிர்கொண்டது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய மலேஷிய மகளிர் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. அதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட் இழப்புக்கு 162 ஓட்டங்களை குவித்தது.

பதிலெடுத்தாடிய மலேசிய மகளிர் அணி 14.1 ஓவர்களில் வெறும் 23 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து படுதோல்வியை சந்தித்தது. போட்டியின் ஆட்டநாயகியாக இலங்கையின் துடுப்பாட்டத்தில் 55 ஓட்டங்களை குவித்த தஹாமி சனெத்மா தெரிவானார்.

இலங்கை அணி தங்களது அடுத்த ஆட்டத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணியை எதிர்கொள்கிறது.

## ஒத்திவைக்கப்பட்ட சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடர் அடுத்த மாதம் ஆரம்பம்

### இலங்கை அணியின் தலைவராக சங்கக்கார




கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற்ற வீரர்கள் பங்கேற்கும் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் (ஐ.எம்.எல்) ரி20 கிரிக்கெட் தொடர் கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகும் என திட்டமிடப்பட்ட நிலையில் ஒத்திவைக்கப்பட்ட குறித்த தொடர் மீண்டும் அடுத்த மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தொடரில் பங்கேற்கும் இலங்கை அணியின் தலைவராக குமார் சங்கக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய 06 அணிகள் மோதும் இந்த தொடரில் பெப்ரவரி 22ஆம் திகதி முதல் மார்ச் 16ஆம் திகதிவரை இந்தியாவின் மூன்று மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இந்திய அணியின் தலைவராக சச்சின் டெண்டுல்கரும் அவுஸ்திரேலியாவின் தலைவராக ஷேன் வொட்சனும் இங்கிலாந்து தலைவராக இயோன் மோர்கனும் வெஸ்ட் இண்டீஸ் தலைவராக பிரையன் லாராவும் தென்னாபிரிக்கா தலைவர் ஜாக் காலிஸும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான இந்திய குழாம் அறிவிப்பு




பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாடும் 15 பேர் கொண்ட ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய குழாம் சனிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

குறித்த குழாமில் அணியின் உப தலைவராக சுப்மன் கில் செயற்படவுள்ளார். மேலும் நீண்ட இடைவெளிக்கு பிறகு வேகப்பந்து வீச்சாளரான முஹமட் ஷமி மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். வொஷிங்டன் சுந்தர், அக்சர் படேல், ரவீந்திர ஜடேஜா, ஹர்திக் பாண்ட்யா ஆகிய 04 சகலதுறை வீரர்கள் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

மேலும் விராட் கோஹ்லி, ஷ்ரேயாஸ் ஐயர், ராகுல், ரிஷாப் பண்ட் ஆகிய நட்சத்திர துடுப்பாட்ட வீரர்கள் குழாமில் இடம்பெற்றுள்ளனர். 08 அணிகள் பங்கேற்கும் ஒன்பதாவது சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது.

**இந்திய குழாம் விபரம்**

ரோஹித் சர்மா, சுப்மன் கில், விராட் கோஹ்லி, ஷ்ரேயாஸ் ஐயர், கே.எல்.ராகுல், ஹர்திக் பாண்ட்யா, அக்சர் படேல், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், ஜஸ்பிரீத் பும்ரா, முஹமட் ஷமி, அர்ஷ்தீப் சிங், யஷஸ்வி ஜெய்ஸ்வால், ரிஷாப் பண்ட், ரவீந்திர ஜடேஜா

## காட்டுத் தீ நிவாரணம் வழங்கிய டென்னிஸ் வீரர்



**காட்டுத்தீக்கு இரையான அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்துக்கு அமெரிக்க டென்னிஸ் வீரர் டெய்லர் பிரிட்ஸ் நிவாரண நிதி வழங்கியுள்ளார்.**

**ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸி. ஓபன் டென்னிஸ் தொடர் தற்போது நடைபெற்றுவரும் நிலையில், காட்டுத்தீக்கு இரையான லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தின் நிவாரணப் பணிகளுக்காக அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் ஆடும் அமெரிக்க டென்னிஸ் வீரர் டெய்லர் பிரிட்ஸ், தான் முதல் சுற்றில் வென்ற 82 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நிவாரணப் பணிகளுக்காக வழங்கியுள்ளார்.**

**மேலும் தன்னை வளர்த்த ஊருக்கு தன்னால் இயன்றதை செய்வதாகவும் மக்களுக்கு உதவ பலர் முன் வரவேண்டும் என்றும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7